வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu







Email : news@eelanadu.lk | மலர் : 04 | 08.02.2023 புதன்கிழமை | இதழ் : 61 | பக்கங்கள் : 16

## 13இற்கும் அப்பால் தமிழருக்கு அதிகாரங்களை வழங்குங்கள்

### மூன்று மகாநாயக்கர்கள் தலைமையில் யாழ்ப்பாணம் வந்த தேரர்கள் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 08
13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால் தமிழ் மக்களுக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று நேற்று யாழ்ப்பாணம் வந்த மூன்று மகாநாயக்கர்கள் தலைமையிலான தேரர்கள் குழு கூறியுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக அறிவதற்காக பிக்குகள் அடங்கிய சர்வமத குழு நேற்று யாழ்ப்பாணம் வந்தது.

இவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சர்வமதங்களை சேர்ந்த தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

15

## மருத்துவர்கள் இன்று புறக்கணிப்பு!

கொழும்பு, பெப். 08
நாடு தழுவிய ரீதியில் 24 மணி நேரம் அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் மருத்துவர்கள் இன்று காலை 8 மணிமுதல் ஈடுபடுவர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

15

# எம்மை நாமே ஆளுகின்ற நிரந்தர தீர்வு வேண்டும்!

## பேரணியின் பிரகடனத்தில் வலியுறுத்து



**மட்டக்களப்பு, பெப்ரவரி 08**
**ஈழத்தமிழரின் தேசிய இனப் பிரச்னையில் மரபுவழி தாயகம், தமிழ் தேசியம், தன்னாட்சியுரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வும், சர்வதேசத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டு - கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பு மூலம் தமிழ் மக்களின் ஆணை பெறப்படவேண்டும்.**
**அத்துடன், ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து, எம்மை நாமே ஆளக் கூடிய நிரந்தரத் தீர்வும் பொதுவாக்கெடுப்பில் உள்ளடக்கப்படவேண்டும்.**

- இவ்வாறு சுதந்திர நாளை கரிநாளாக பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு பயணித்த பேரணியின் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்ற பேரணியின் நிறைவு நிகழ் வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாண வர்களால் பிரகடன உரை வாசிக்கப் பட்டது.

ஈழத்தமிழர்கள் மரபுவழித்தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமைக்கு உரித்து டைய ஒரு தேசிய இனம் என்பதன் அடிப்படையிலும் வட்டுக்கோட்டைத்

15



## வீதியில் காயவிடப்பட்ட நெல் குடும்பஸ்தர் உயிரை பறித்தது!

கிளிநொச்சி, பெப். 08
வீதியில் நெல் காயவிடப்பட்டிருந்த நிலையில் விலகிவந்த மோட்டார் சைக்கிளை கப் ரக வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.
நேற்று மாலை 4.30 மணியளவில் பரந்தன் - பூநகரி வீதியில் ஒவசியர்

15

## ‘13’ குறித்து பாராளுமன்று தீர்மானிக்க வேண்டும்!

### கரு ஜெயசூரிய தெரிவிப்பு

கண்டி, பெப். 08
13ஆவது திருத்தச் சட்டம் என்பது எமது அரசமைப்பில் ஒரு பகுதி. எனினும், இதனால் நாடு பிளவுபடும் என்ற சந்தேகம் மகாநாயக்க தேரர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் கட்சி தலைவர்களுடன் கலந்துரையாடி பாராளுமன்றத்தில் தீர்மானிக்க வேண்டும் - இப்படி

15

## மக்களின் பேரெழுச்சியுடன் மட்டு.வில் பேரணி நிறைவு!

மட்டக்களப்பு, பெப். 08
சுதந்திர தினத்தை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான பேரணி நேற்று மட்டக்களப்பில் பெரும் மக்கள் எழுச்சியுடன் நிறைவடைந்தது.
தமிழ் மக்கள் மீதான அடக்கு

15

## 55 அரச அலுவலகங்களை மூடுவதற்கு அரசு திட்டம்!

14

## பாராளுமன்றில் ஜனாதிபதி இன்று உரை!

கொழும்பு, பெப். 08
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று புதன்கிழமை 9ஆவது பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

15

## தமிழரின் ஒற்றுமையின்மையே தீர்வு இழுபறியாகக் காரணம்!

### வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, பெப். 08
அரசியல் தீர்வு விவகாரத்தில் தமிழ் தலைமைகள் மத்தியில் ஒற்றுமை கிடையாது. இதுவே அரசியல் தீர்வு இழுபறிக்குப் பிரதான காரணம். அதிகார பகிர்வு விடயத்தில் தெற்கு அரசியல்வாதிகள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு முன்னர் முதலில் தமிழ் தலைமைகள் ஒருமித்த இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்.
- இவ்வாறு தெரிவித்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார.
13ஆவது திருத்தச் சட்டத்தில் அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

15




# இப்படியும் நடக்கிறது…!

நண்பர் ஒருவர் யாரோ ஒருவரின் முகநூலில் வந்திருந்த பதிவு ஒன்றின் 'ஸ்கிறீன் ஷொட்'டை அனுப்பியிருந்தார். கூடவே ஒரு நீண்ட பதிவின் இணைப்பையும் சேர்த்திருந்தார்.

'உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியாது' என்பதுதான் நண்பர் அனுப்பிய ஸ்கிறீன் ஷொட்டில் இருந்தது.

அவர், யாரோ ஒருவர் யாருக்கோ எழுதிய குறிப்பு ஒன்றை ஏன் எனக்கு அனுப்பினார் என்பது புரிந்துகொள்ளக் கூடியதுதான்.

நண்பருக்கு பதில் அனுப்பினேன். 'உயர உயர பறப்பதெல்லாம் தானும் பருந்தாகி விட்டேன் என்று நினைத்துக் கொண்டு பறப்பதில்லையே. ஆனாலும் ஒரு சந்தேகம். ஊர்க்குருவிக்கு பருந்துபோல உயரத்தில் பறக்கவும் முடிகின்றது. ஆனால், பருந்துக்கு ஊர்க்குருவி போல வீட்டுக்குள்ளும் பறக்க முடியுமா?

நான் கேட்ட கேள்விக்கு நண்பரிடமிருந்து பின்னர் பதில் வரவே இல்லை.

இந்த சம்பாஷணைக்கும் இந்த ஊர்க்குருவிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

இனி அவர் அடுத்து அனுப்பிவைத்த இணைப்பை திறந்து படித்தேன்.

நடக்கவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலில் தமிழரசு கட்சி தனித்துப் போட்டியிட எடுத்த முடிவு நல்லதுதானே. ஏன் இந்த பங்காளிக் கட்சிகள் குத்திமுறிகின்றன என்று கேட்டிருந்தது அந்த இணைப்பில் இருந்த கட்டுரை.

அவர்கள் குத்திமுறிவதாக தெரியவில்லை. ஆனால், பங்காளிக் கட்சிகள் பற்றி தமிழரசு தலைவர்கள்தான் தமது தரம் தாழ்த்தி கருத்துச் சொல்லி கேவலப்பட்டுப் போயிருக்கின்றனர்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் பல சபைகளில், அநேகமாக பல இடங்களிலும் வட்டாரங்களில் கூட்டமைப்பே அதிக இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. ஆனால், அந்தத் தேர்தலில் போட்டியிட்ட அனைவருமே சுயேச்சைக் குழுக்கள்கூட விகிதாசார முறையில் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களுக்கான இடங்களில் ஆசனங்களைப் பெற்றார்கள்.

கூட்டமைப்பு தனித்தனியாக போட்டியிட்டிருந்தாலும் ஒவ்வொரு வட்டாரங்களிலும் தனிப்பட்ட செல்வாக்குப் பெற்ற கூட்டமைப்பு கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருந்தாலும் மூன்று கட்சிகளுக்கும் விகிதாசார ரீதியில் தெரிவாகின்ற உறுப்பினர்களிலும் பல இடங்கள் கிடைத்திருக்கும். தேர்தலில் பின்னர் மூன்று கட்சிகளும் கூட்டமைப்பாக ஆட்சியமைத்திருக்கலாம் என்று யோசனை சொன்னது அந்தக் கட்டுரை.

உண்மைதான், அப்படி பல குழுக்களாகப் போட்டியிட்டிருந்தாலும் பல இடங்கள் போனஸ் ஆசனங்களாகக் கிடைத்திருக்கும்தான். ஆனால், அப்படி செய்திருந்தால் எப்போதும்போல தமிழ் மக்களை ஒற்றுமையாக வாக்களியுங்கள் என்று கேட்கும் தார்மீக உரிமையை கூட்டமைப்பு இழந்திருக்கும்.

உள்ளூராட்சி சபைகளில் பலமான ஆட்சியை அமைக்க வேண்டும் என்பது அவசியம்தான். அதற்காக என்ன செய்திருக்கலாம்? கூட்டமைப்பாக மூன்று கட்சிகளும் வழமை போல போட்டியிட்டுக் கொண்டு, சிறீதரன் பாணியில் சுயேச்சைக் குழுக்களை போட்டியிட வைத்திருக்கலாம். அந்தக் குழுக்களுக்கும் சில இடங்கள் போனஸ் ஆசன மாகக் கிடைத்திருக்கும் அவர்களை இணைத்துக் கொண்டு ஆட்சி அமைத்திருக்கலாம்.

கடந்த பாராளுமன்ற தேர்தலிலேயே, சிறீதரன் தனியான ஒரு சுயேச்சைக் குழுவை களத்தில் இறக்கியிருந்தது எதற்காக?

அவர்கள் வெற்றிபெறுவார்கள் என்பதற்காகவா? இல்லையே. தன்னோடு நின்று பின்னர் முரண்பாடுகளால் பிரிந்து நிற்கின்ற சிலர் தனது அரசியல் எதிரிக்கு வாக்களித்து விடக்கூடாது என்பது மாத்திரமே அதன் பின்னணி என்றுதான் பலரும் கருதுகின்றனர். ஆனால், அந்த சுயேச்சைக் குழுவின் சார்பில் வாக்கு எண்ணும் இடங்களில் நியமிக்கப்பட்டிருந்த முகவர்கள், வாக்கு எண்ணும் இடங்களில் என்ன நடக்கின்றது என்பதை கவனிக்கலாம் அல்லவா? அது எதற்கு? தமிழரசு கட்சியின் முகவர்கள்தான் இருக்கிறார்களே என்று சிறீதரனால் விட்டுவிட முடியவில்லையோ என்னவோ? தனக்கு நம்பிக்கையானவர்கள் கண்காணிப்பதைப்போல வருமா?

இதுபோலவே, உள்ளூராட்சி தேர்தலையும் புத்திச ாலித்தனமாக எதிர்கொண்டிருக்கலாமோ?

**- ஊர்க்குருவி**

# யாழ். - மட்டு. பேரணியின் இறுதிநாள் பதிவுகள்
















ஈழநாடு
Eelanadu
08.02.2023 புதன்கிழமை
பிலவ வருடம், தை 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பிக்குகளின் அறிவிப்பு?

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த தென்னிலங்கை பிக்குகள் குழுவொன்று, 13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் அப்பால் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்க வேண்டுமென்று தெரிவித்திருக்கின்றது. இது நல்ல விடயம். ஆனால், இது தொடர்பில் பிக்குகள் சொல்ல வேண்டிய இடம் யாழ்ப்பாணம் அல்ல. இதனை சிங்கள கடும்போக்குவாதிகளின் பிடிக்குள் சிக்குண்டிருக்கும் சிங்கள மக்களிடம்தான் கூற வேண்டும். 13இற்கு அப்பால் செல்ல வேண்டுமென்பதுதான் தமிழர்களின் விருப்பம் - ஆனால், 13இலுள்ள விடயங்களையே சிக்கலாக நோக்கும் தென்னிலங்கை இடையூறுகளுக்கு மத்தியில் எவ்வாறு 13இற்கு அப்பால் செல்வது?

ரணில் விக்கிரமசிங்க கடந்தகால அனுபவங்களிலிருந்து சில படிப்பினைகளை கற்றுக்கொள்ள முயற்சிக்கின்றார். இந்த பின்புலத்தில் தான், 13ஆவது திருத்தச் சட்டத்தைப் அமுல்படுத்தப் போவதாக கூறுகின்றார். அவரின் கடந்தகாலம் தொடர்பில் சில கேள்விகள் இருந்தாலும்கூட, அவரது இன்றைய நிலைப்பாடு வரவேற்கப்பட வேண்டியது. ஆனால், இதனை அவரால் தனித்து முன்கொண்டு செல்ல முடியாது. பொருளாதார நெருக்கடியின் விளைவாக, சிங்கள மக்களுக்கு பயந்து வீடுகளுக்குள் முடங்கிய விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, சரத்வீரசேகர போன்ற அரசியல்வாதிகள் தங்களை மீளவும் வீரர்களாக காண்பிப்பதற்கு 13ஆவது திருத்தத்தை கையிலெடுத்திருக்கின்றனர். மீளவும் சிங்கள மக்களை உசுப்பிவிடும் அரசியலை முன்னெடுக்க முயற்சிக்கின்றனர். இவ்வாறு சிங்கள மக்களை உசுப்பிடும் அரசியல்வாதிகளால் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடிந்ததா?

இந்த விடயங்கள் தொடர்பில் பௌத்த பிக்குகள் சிங்கள மக்கள் மத்தியில் பேச வேண்டும். ஏனெனில், இப்போது 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தை தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை. ஒரு சில விதண்டாவாத - மூர்க்கமான தமிழ் குழுக்கள் இருந்தாலும்கூட தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் ஐக்கிய இலங்கைக்குள் சுயாதீனமாக இயங்கக்கூடிய மாகாண சபை நிர்வாகத்தை விரும்புகின்றனர் - அதனை ஆதரிக்கின்றனர். அதிலிருந்து பயணிப்பதே சரியானதென்று நம்புகின்றனர். விருப்பங்களுக்கு அப்பால் யதார்த்தங்களைப் புரிந்துகொள்ளும் நிலைமை தமிழ் சூழலில் ஏற்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசியல் யதார்த்தத்தைப் புரிந்துள்ளது.

ஆனால், தென்னிலங்கையோ தொடர்ந்தும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை புறம்தள்ளுவதிலேயே கரிசனையுடன் இருக்கின்றது. இந்த நிலைமைக்கு எதிராக பிக்குகள் சிங்கள மக்கள் மத்தியில் உண்மையைக் கூறவேண்டும். அவ்வாறானதொரு சூழல் ஏற்பட்டால்தான் நாடு முன்னோக்கி பயணிக்க முடியும். நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தடையாக இருப்பவர்கள் தமிழ் மக்கள் அல்லர். அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களைக்கூட அமுல்படுத்த முடியாதென்று கூறும் நிலைமையிருந்தால், ஐக்கிய இலங்கைக்குள் வாழ வேண்டுமென்னும் எண்ணம் எவ்வாறு ஏற்படும்? இது தொடர்பில்தான் சிங்கள முற்போக்கு சக்திகள் சிந்திக்க வேண்டும்.

13ஆவது திருத்தச்சட்டம் அரசியலமைப்பு. அரசியலமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்துவது தொடர்பில்தான் இப்போது விவாதிக்கப்படுகின்றது. அரசியலமைப்பில் இருப்பதையே அமுல்படுத்த முடியாதென்றால் இந்த நாட்டின் அரசியல் கட்டமைப்பின் மீது தமிழ் மக்கள் எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்? இப்போது இந்தக் கேள்விக்கான பதிலை காண வேண்டிய பொறுப்பு சிங்களவர்களுக்குரியதாகும்.

வரலாறு முழுவதும் பௌத்த பிக்குகள் அரசியலில் எதிர்மறையான பங்கையே வகித்து வந்திருக்கின்றனர். இல்லை - நாங்கள் சரியான பாதையிலும் சிந்திக்கக் கூடியவர்கள் என்பதை இப்போது பிக்குள்தான் நிரூபிக்க வேண்டும்.

*சீனாவின் கடிதம் மாற்றப்பட்ட விவகாரம்:*

# இராஜதந்திர சிக்கலில் இலங்கை அரசாங்கம்!

கொழும்பு, பெப். 08

இரண்டு வருடங்களில் கடனை மறுசீரமைக்க முடியும் என்று சீனா அனுப்பிய கடிதத்தை மாற்றியமைத்ததால் இலங்கை பெரும் இராஜதந்திர நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) கடனைப் பெறுவதற்காக கடனை மறுசீரமைப்பு செய்வதாக கடந்த மாதம் சீனா அறிவித்ததாக தகவல் வெளியானது.

இது தொடர்பான கடிதம் பீஜிங் நிர்வாகத்தால் இலங்கையிலுள்ள சீனத்தூதரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தக் கடிதத்தில், "இரண்டு வருடங்களில் கடனை மறுசீரமைக்க முடியும்", என்று அனுப்பியிருந்ததை குழு ஒன்று மாற்றியமைத்தது என்ற தகவல்கள் பரவியிருந்தன.

மிக இரகசியமாக அனுப்பி வைக்கப்பட்ட இந்தக் கடிதத்தை இலங்கையின் அதிகாரிகளுக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், இது தொடர்பான கடிதம் அதிகாரபூர்வமாக ஊடகங்களில் வெளியாவதற்கு முன்னமே அந்தக் கடிதத்தில் உள்ள 2 வருடங்கள் என்ற காலப் பகுதியை 5 வருடங்கள் என குழு ஒன்று மாற்றியது. அத்துடன், இது ஊடகங்களுக்கும் வெளியிடப்பட்டமை பெரும் சர்ச்சையாக வெடித்தது.

சீனாவின் அனுமதியோடோ அல்லது அறியாமலோ வெளிநாட்டில் இருந்து அனுப்பப்பட்ட அதிகாரபூர்வ கடிதத்தை திருத்தியமைப்பது என்பது பாரதூரமான இராஜதந்திர பிரச்னை என்பதால் இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் மிகவும் கவலையடைந்தது.

இதையடுத்து, கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் உடனடியாக இது தொடர்பாக பீஜிங் நிர்வாகத்துடன் உரையாடினார். அவருக்கு, இது மிகவும் ஆபத்தான சூழ்நிலை என்பதால், அரசாங்கத்தின் உயர்மட்ட தலைவர்களிடம் எழுத்துபூர்வமாக முறையிடுமாறு பீஜிங்கில் இருந்து அறிவுறுத்தப்பட்டது.

இதையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மூத்த ஆலோசகரும் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோரிடம் எழுத்து மூலமான முறைப்பாட்டை சீன பதில் தூதுவர் செய்தார்.

மேலும், இது தொடர்பில் சீன பதில் தூதுவர், சாகல ரத்நாயக்க மற்றும் டிரான் அலஸ் ஆகியோரை நேரில் சந்தித்தும் முறைப்பாடு செய்தார். தவிர, குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகளையும் சந்தித்து இது தொடர்பில் உரையாடினார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பான சந்தேகத்தில் சிலரின் பெயர்கள் கூறப்பட்டன. இது விடயத்தில் சீனா கடுமையான நிலைப்பாட்டை எடுக்கத் தயாராகி வருவதாகவும் கூறிப்படுகின்றது. (ஐ-சி)

# ஏ. ரி. எம். இயந்திரங்கள் அருகே பாதுகாப்பை அதிகரிக்க முடிவு

## பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு

கொழும்பு, பெப். 08

தன்னியக்க பணப்பரிமாற்ற (ஏ. ரி. எம். ) இயந்திரங்கள் அமைந்துள்ள இடங்களில் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கடந்த காலங்களில் இடம்பெற்ற தன்னியக்க பணப் பரிமாற்ற இயந்திர திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அண்மையில் குருநாகலில் தன்னியக்க பணப் பரிமாற்ற இயந்திர திருத்தப் பணிக்காக செல்வது போன்று பாவனை செய்து பெருந்தொகை பணம் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 10, 11, 12ஆம் நாள்களில் யாழ். கம்பன் விழா!

யாழ்ப்பாணம், பெப். 08

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் யாழ். கம்பன் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி காலை, மாலை நிகழ்வுகளாக தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

நிகழ்வு நடைபெறும் மூன்று தினங்களும் இலக்கிய ஆணைக்குழு, சிந்தனை அரங்கு, பட்டிமண்டபம், விவாத அரங்கு, வழக்காடு மன்றம் என்பன நடைபெறவுள்ளன.

அத்துடன், இந்த நிகழ்வுகளில் இலங்கை, இந்தியாவை சேர்ந்த தமிழ் அறிஞர்கள், பேச்சாளர்கள் பங்கேற்கவுள்ளனர். (ஐ)

# தொடர் சொற்பொழிவு


யாழ்ப்பாணம், பெப். 08

புத்தூர் மேற்கு கலைமதி ஆலடி முருகன் ஆலய மகா கும்பிஷேக பெருவிழாவை முன்னிட்டு தொடர் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 20ஆம் திகதி திங்கட்கிழமை வரை மாலை 6.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்தத் தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் இந்த தொடர் சொற்பொழிவை இளம்சைவப்புலவர் ச. நவநீதன் "விநாயகர் திருவுருவம் உணர்ந்தும் தத்துவம்" என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
முயற்சிகளில் கவனம் தேவை. அடுத்தவரிடம் எந்த வேலைகளையும் ஒப்படைக்க வேண்டாம். செயலில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆனால் உங்கள் எதிர்பார்ப்பில் இழுபறியான நிலை ஏற்படும்.

**இடபம்**
பணியிடத்தில் எச்சரிக்கைத் தேவை. சிலர் மேலதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாவீர்கள். அரசு வழியிலான முயற்சிகளில் எதிர்பார்த்த நன்மை இல்லாமல் போகும்.

**மிதுனம்**
நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும். ஆதாயத்தை வைத்து பொன் பொருள் வாங்குவீர்கள். புதிய வேலை வாய்ப்பை எதிர்பார்த்தவர்களுக்கு அழைப்பு வரும். தடைபட்ட முயற்சி நிறைவேறும்.

**கடகம்**
பண விஷயத்தில் கவனம் தேவை. முயற்சி நிறைவேற விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. முயற்சியில் தீவிரம் காட்டுவீர்கள். அலைச்சல்கள் வழியே நினைத்ததை சாதிப்பீர்கள்.

**சிம்மம்**
உங்கள் முயற்சி நிறைவேறும். விஐபிகள் ஆதரவால் எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பணியாளர்கள் கவனமுடன் செயல்பட வேண்டும். மனதில் பல்வேறு குழப்பம் உண்டாகும்.

**கன்னி**
எதிர்பாராத செலவுகள் உண்டாகி அவதிப்படுவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தினரால் சில பிரச்னைகளை சந்திப்பீர்கள். சங்கடங்கள் ஏற்படும். வியாபாரத்தை விரிவு செய்வீர்கள்.

**துலாம்**
நெருக்கடிகளில் இருந்து விடுபடுவீர்கள். நினைத்திருந்த ஒரு வேலையை முடிப்பீர்கள். மனதில் புதிய சிந்தனை உண்டாகும். எதிர்காலத்திற்குரிய வழியை தேர்வு செய்வீர்கள்.

**விருச்சிகம்**
பணியிடத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். மேலதிகாரிகளின் பாராட்டிற்கு ஆளாவீர்கள். தொழிலை மாற்றி அமைக்கவோ விரிவு செய்யவோ முயற்சிப்பீர்கள். உங்கள் செயலில் லாபம் உண்டாகும்.

**தனுசு**
இரண்டு நாட்களாக இருந்த நெருக்கடிகள் விலகும். முயற்சிகள் எளிதாக நிறைவேறும். உங்கள் அறிவாற்றலால் பிரச்னைகளை எதிர் கொண்டு சமாளிப்பீர்கள். பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும்.

**மகரம்**
எதிர்பார்த்தவற்றில் தாமதம் உண்டாகும். மனதில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்படும். முயற்சிகளில் சிரமங்களைக் காண்பீர்கள். எதிரிகளால் பிரச்னைகளை சந்திப்பீர்கள்.

**கும்பம்**
மனதிற்கினிய சம்பவங்களால் மகிழ்வீர்கள். நீங்கள் எதிர்பார்த்த ஒன்றை அடைவீர்கள். உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பண வரவு மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

**மீனம்**
செயல்களில் விவேகம் இருக்கும். உங்களுக்கு உண்டான பிரச்னைகளை சரி செய்வீர்கள். சுறுசுறுப்பாக செயல்பட்டு பாராட்டு பெறுவீர்கள். எதிரிகளால் உண்டான தொல்லைகள் விலகும்.

# பன்னீர் - பழனிசாமி சந்திப்பு? தேர்தல் நேரம் எதுவும் நடக்கும்

## பன்னீர்செல்வம் அணி தரப்பு

சென்னை, பெப். 08

தேர்தல் நேரத்தில் எதுவும் நடக்கலாம் என்று ஓ.பன்னீர் செல்வம் அணியைச் சேர்ந்த கு.ப.கிருஷ்ணன் தெரிவித்தார்.

ஓ.பன்னீர்செல்வம் மதுரை செல்வதற்கு முன்பு பசுமை வழிச் சாலையில் உள்ள அவரின் அணியைச் சார்ந்த முன்னாள் அமைச்சர் கு.ப கிருஷ்ணன் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர் கூறுகையில், "ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் ஆளும் தி. மு. கவை எதிர்த்து நிற்கிறோம். இரட்டை இலை சின்னம் பழனிசாமி தரப்புக்கு போனதால் எந்த பின்னடைவும் இல்லை. இடைத் தேர்தலுக்கு மட்டுமே உச்சநீதிமன்றம் இடைக்கால தீர்ப்பு வழங்கி உள்ளது. இரட்டை இலை சின்னத்தின் வெற்றிக்கு பிரசாரம் செய்வோம். ஓ. பன்னீர்செல்வத்தை பாராட்டிய செங்கோட்டையனுக்கு நன்றி என தெரிவித்தார்.

இதையடுத்து, பன்னீர்செல்வமும் பழனிசாமியும் சந்திக்க வாய்ப்பு உள்ளதா என்ற கேள்விக்கு பதில் அளித்த கு.ப. கிருஷ்ணன், தேர்தல் நேரத்தில் எதுவும் நடக்கலாம் என கூறினார். (ஐ)

# மக்கள் அனைவரும் வரவேற்கும் நினைவு சின்னம் அமையவேண்டும்!

## தொல். திருமாவளவன் கருத்து

சென்னை, பெப். 08

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு நினைவுச் சின்னம் அமைப்பது அவசியமானது. அதேநேரத்தில், மக்கள் அனைவரும் வரவேற்கும் வகையில் நினைவுச் சின்னத்தை அமைக்க வேண்டும் என்று ஆளும் தி. மு. க. கூட்டணியின் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

திருச்சி செல்வதற்காக சென்னை விமான நிலையத்துக்கு நேற்றுவந்த விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு நினைவுச் சின்னம் அமைப்பது அவசியமானது. அதேநேரத்தில், மக்கள் அனைவரும் வரவேற்கும் வகையில் நினைவுச் சின்னத்தை அமைக்க வேண்டும். இதை முதல்வர் ஸ்டாலின் கவனத்தில்கொண்டு, உரிய முடிவு எடுப்பார்.

விடு தலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்டப் பொறுப்பாளர் களின் பட்டியல் விரைவில் வெளியிடப்படும் - என்றார். (ஐ)

# இடைத்தேர்தலில் அ. தி. மு. கவுக்கு ஆதரவை அறிவித்தது பா. ஜ. கட்சி!

சென்னை, பெப். 08

ஈரோடு கிழக்கு தொகுதி அ. தி. மு. க. வேட்பாளர் தென்னரசுக்கு பா. ஜ. க. ஆதரவு அளிப்பதாக பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில், "தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் ஈரோடு கிழக்குத் தொகுதி அதிமுக வேட்பாளர் கே. எஸ். தென்னரசுக்கு பாஜக தனது முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது.



பா. ஜ. க. தலைவர்களும், நிர்வாகிகளும், தொண்டர்களும் தென்னரசு வெற்றிக்காக பாடுபட வேண்டும். தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் அதிமுக வேட்பாளரை நிறுத்தியுள்ள பழனிசாமிக்கு நன்றி.

கூட்டணி யின் நலன் கருதி வேட்பாளரை திரும்ப பெற்ற பன்னீர்செல்வத்துக்கு நன்றி.

தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றி வேட்பாளராக களம்காணும் தென்னரசுக்கு வாழ்த்துகள் என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார். (ஐ)

# பழனிசாமி தரப்புக்கு இரட்டை இலை சின்னம்!

புதுடில்லி, பெப். 08

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் சின்னத்துக்கான படிவத்தில் தமிழ்மகன் உசேன் கையெழுத்திட இந்தியத் தேர்தல் ஆணையம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தமிழ் மகன் உசேனை அங்கீகரித்து ஈரோடு கிழக்குத் தொகுதி தேர்தல் அலுவலர் சிவகுமாருக்கு தேர்தல் ஆணையம் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளது.

இதனால், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு இரட்டை இலை சின்னம் கிடைப்பது உறுதியாகியுள்ளது.

ஈரோடு இடைத்தேர்தலில் அ. தி. மு. க. வேட்பாளருக்கான படிவத்தில் ஏ, பி பிரிவுகளில் தமிழ்மகன் உசேன் கையெழுத்திட தேர்தல் ஆணையம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. எனினும் குறுகிய காலத்துக்கு மட்டுமே தமிழ்மகன் உசேனுக்கு இந்த அங்கீகாரம் வழங்குவதாகவும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது.

# ஆதிமனிதன் வாழிட பகுதியை அறியும் ஆய்வுகள் தொடங்கின

சென்னை, பெப். 08

ஆதிச்சநல்லூரில் ஆதி மனிதன் வாழ்ந்த வாழிடப் பகுதிகளைக் கண்டறியும் அகழாய்வு நடவடிக்கை நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமானது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம், மூன்று இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு நடவடிக்கைகளில் முதுமக்கள் தாழிகள், இருப்புப் பொருட்கள், தங்க நெற்றிப் பட்டயம் உட்பட்ட பெருமளவான எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் மேலும் ஐந்து இடங்களில் அகழாய்வு மேற்கொள்வதற்கு மத்திய அரசு கடந்த ஆண்டு அனுமதி வழங்கியிருந்தது.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அகரம், கொங்கராய குறிச்சி, கால்வாய், கருங்குளம், திருக்கோளூர் ஆகிய பகுதிகளில் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில், வைகுண்டத்திலிருந்து 6 கிலோ மீற்றர் கிழக்கே உள்ள திருக்கோளூரில் அகழாய்வுப் பணிகள் தொடங்கின என்று தொல்லியல் பிரிவு அறிவித்தது. (ஐ)

# இலங்கையின் தலைவிதி வெகுவிரைவில் மாறும்!

## பான் கீ மூன் நம்பிக்கை



**கொழும்பு, பெப். 08**
**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல முடியும் என தான் நம்புவதாக ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்தார்.**

மேலும் அவரது புத்திசாலித்தனமான தலைமைத்துவத்தின் கீழ் இலங்கையில் ஜனநாயகம் மற்றும் நிலையான பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியும் என்ற நம்பிக்கையும் இருப்பதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற பசுமை வளர்ச்சிப் பாதைக்கான இலங்கையின் மாற்றத்தை விரைவுபடுத்துவதற்கான உத்திகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்த உயர்மட்ட நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கைக்கு இறுதியாக வருகை தந்ததுக்கு பின்னர் கடந்த ஆறரை ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்களைத் தான் அறிவேன் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் தெரிவித்தார். (அ)

# தனியார் துறையினருக்கும் இனி சுகாதாரக் காப்புறுதி!

கொழும்பு, பெப். 08
அக்ரஹார சுகாதார காப்புறுதிக்கு நிகரான சுகாதார காப்புறுதியை தனியார் துறை ஊழியர்களுக்கும் வழங்குவதற்காக ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட உரையில், தனியார் துறை ஊழியர்களுக்கு அக்ரஹார சுகாதார காப்புறுதிக்கு நிகரான சுகாதார காப்புறுதியை வழங்குவதற்கான பிரேரணையை ஜனாதிபதி பாராளுமன்றத்தில் முன்வைத்ததாகவும், முன்மொழிவை செயல்படுத்துவதற்காக 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தில் திருத்தம் செய்வது அவசியம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இந்த யோசனையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். (அ)

# வேகமாக அதிகரிக்கும் அரசாங்க வருமானம்

கொழும்பு, பெப். 08
2022 ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலப்பகுதியில் அரச வருமானம் 1,806.7 பில்லியன் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது 1,322.0 பில்லியனுடன் ஒப்பிடும்போது 36 வீத அதிகரிப்பு என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2022 நவம்பரில், 220.7 பில்லியனாகவும் ஒக்ரோபரில், 138 பில்லியனாக பதிவாகியுள்ளது.இதனால், ஒக்ரோபருடன் ஒப்பிடுகையில், நவம்பரில் அரச வருவாய் 60 வீதம் அதிகரித்துள்ளது.

இதேவேளை 2022 ஒக்ரோபரில், 120.3 பில்லியனாக இருந்த வரி வருவாய் நவம்பரில் 205.1 பில்லியனாக 70 வீதமாக அதிகரித்துள்ளது என்றும் அறிவித்துள்ளது. (அ)

# இன்றைய பாராளுமன்ற அமர்வை சஜித், டலஸ் தரப்புகள் புறக்கணிப்பு

கொழும்பு, பெப். 08
இன்று ஆரம்பமாகும் பாராளுமன்ற அமர்வை புறக்கணிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த தகவலை வெளியிட்டார்.

அத்துடன், டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையும் குறித்த அமர்வை புறக்கணிக்கவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்தாலும் அதன் பங்காளிக் கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸ், முற்போக்கு கூட்டணி, மக்கள் காங்கிரஸ் என்பன பங்கேற்கவுள்ளன.

9 ஆவது பாராளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத்தொடரை இன்று ஜனாதிபதி ஆரம்பித்து வைக்கின்றார். இதன்போது ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையும் இடம்பெறும். (அ)

# அரசின் அடாவடி வரி விதிப்பால் 500 மருத்துவர்கள் வெளியேற்றம்!

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 08
அரசின் அடாவடித்தனமான வரி விதிப்பால் சுமார் 500 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று தேசிய மக்கள் சக்தியின் செயலாளரான வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறுபவர்களிடமிருந்து 6 சதவீதம் முதல் 36 சதவீதம் வரை வரி அறவிடப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



“ வைத்தியர்கள் உட்பட ஏனைய தொழில்சார் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் எதிர்காலத்தில் பாரிய சிக்கல் உருவாகும். வைத்தியர்கள் நாட்டுக்கு சேவை செய்யக்கூடிய சிறந்த திறமை படைத்தவர்கள். எனினும், இன்றளவில் சுமார் 500க்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர். வைத்தியத் துறையில் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றுபவர்களும் நாட்டை விட்டு செல்ல முயற்சி மேற்கொண்டுள்ளனர்.”-எனவும் வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க குறிப்பிட்டார். (அ)

# சரண குணவர்த்தனவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கொழும்பு, பெப். 08
முன்னாள் பிரதி அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் சரண குணவர்தனவிற்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று குற்றப்பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சந்தேக நபருக்கு 50,000 ரூபா மற்றும் 05 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் செல்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா அனுமதி வழங்கினார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் முன்னிலையாகுமாறு விடுக்கப்பட்ட அறிவிப்பிற்கு அமைய முன்னாள் பிரதி அமைச்சர் நீதிமன்றில் நேற்று ஆஜராகினார். இந்த வழக்கு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளன.

பிரதிவாதிக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சரண குணவர்தன அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக கடமையாற்றிய போது, லொத்தர் சபைக்கு தேவையான வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் போது முறையான நடைமுறைகளை பின்பற்றாமை காரணமாக அரசாங்கத்திற்கு சுமார் 9 இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுத்தியதாக கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# மோசடி ஆவணங்கள் தயாரிப்பு; பொலிஸ் உத்தியோகத்தர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 08
வல்வெட்டித்துறையில் உள்ள அரச வங்கியொன்றில் 1 மில்லியன் ரூபா கடனாகப் பெறுவதற்கு மோசடியான ஆவணங்களைத் தயாரித்த வழக்கில் நெல்லியடி பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் வடமாகாணத்தைச் சேர்ந்தவர். கடன் ஆவணங்களை போலியாக தயாரித்து பணம் பெற்ற பிரதான சந்தேக நபர் வெளிநாடு தப்பிச் சென்றுவிட்டார்.

வங்கி அதிகாரிகள் அளித்த முறைப்பாட்டின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர்.

பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் சந்தேகநபர் 10,000 ரூபா ரொக்கப் பிணை மற்றும் 100,000 ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சந்தேக நபரின் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. (அ)

# கரைதுறைப்பற்று வேட்புமனு நிராகரிப்பு: அறிக்கை கோருகின்றது உயர்நீதிமன்றம்!

கொழும்பு, பெப். 08
முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக இலங்கை தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையை இன்று பிற்பகல் 2 மணிக்குள் தாக்கல் செய்யுமாறு சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரைதுறைப்பற்று உள்ளூராட்சிச் சபைக்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக இலங்கை தமிழரசுக் கட்சியால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம். சுமந்திரன் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (அ)

# தேர்தலை ஒத்திப்போடுவதாக நான் எங்கும் சொல்லவில்லை!

## ஐ.தே.க. கூட்டத்தில் கூறினாராம் ரணில்



**கொழும்பு, பெப். 08**

**நான் தேர்தலை ஒத்திப்போடுவதாக எங்கும் சொல்லவில்லையே என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழு கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இதனால் திட்டமிட்ட திகதியில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடக்கலாம் என்ற முடிவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் வந்துள்ளார்கள் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தேர்தல் நடக்குமா, இல்லையா என்ற சந்தேகம் எதிர்க் கட்சிகளுக்கு மட்டுமல்ல அரச தரப்பு எம்.பிக்களுக்கும்தான் உண்டு. தேர்தல் நடக்குமா, இல்லையா என்று ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவுக்கு மட்டும் தான் தெரியும். அவர் இறுதி நேரத்தில் என்ன முடிவை எடுக்கப்போகின்றார் என்று அவர் மட்டுமே அறிவார். அவரது திட்டங்களை அவரது ஆட்களுக்கே சொல்லமாட்டார். இதனால் அரசுக்கே குழப்பம்தான்.

கடந்த வாரம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் இது பற்றி பேசப்பட்டது. தேர்தலுக்குத் தயாராகுங்கள் என்றார் ரணில். அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன எந்தத் தேர்தலுக்கு என்று கேட்டார். அதற்கு "எல்லாத் தேர்தலுக்கும்" என்றார் ரணில்.

இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்குமா என்று அங்கிருந்தவர்கள் ரணிலிடம் மீண்டும் கேட்டனர். நான் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை ஒத்திப்போடுவதாக எங்கும் சொல்லவில்லையே என்றார் ரணில். இதனால் தேர்தல் நடக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள்.

மற்றுமொரு கூட்டம் பஸில் ராஜபக்ஷவுக்கும் மொட்டுக் கட்சி முக்கியஸ்தர்களுக்கும் இடையில் கடந்த வாரம் இடம்பெற்றது. அங்கு தேர்தல் கட்டாயம் இடம்பெறும் என்றார் பஸில். இதனால் மொட்டுக் கட்சியின் பக்கம் இருந்த சந்தேகமும் தீர்ந்துவிட்டது. அது மாத்திரமன்றி, இந்தத் தேர்தலில் மொட்டுக் கட்சியை வழிநடத்திச் செல்லும் பஸில் மொட்டின் வெற்றி, தோல்வியைப் பற்றி அக்கறைகொள்ளவில்லையாம். அவருக்குத் தெரியும் உண்மையான நிலைமை. அதனால் தேர்தலை நடத்தினால் போதும் என்ற நிலைப்பாட்டில் உள்ளாராம்-என்றுள்ளது. (அ)

# சுதந்திர கட்சிக்குள் மேலுமொரு பிளவு!

கொழும்பு, பெப். 08

அரசாங்கத்துக்கு ஆதரவளிக்காத சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே பிளவு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுதந்திர கட்சியை அங்கத்துவப்படுத்தி 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவாகினர்.

அவர்களில் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, மஹிந்த அமரவீர, நிமல் சிறிபால டி சில்வா, லசந்த அழகியவண்ண, சாமர சம்பத் தசநாயக்க, சுரேன் ராகவன், சாந்த பண்டார, ஜகத் புஸ்பகுமார, சுதந்திர கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட 9 பேர் அரசாங்கத்துக்கு ஆதரவாக செயற்படுகின்றனர்.

அவ்வாறான பின்னணியில், சுதந்திர கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, சான் விஜயலால் டி சில்வா, சாரதி துஷ்மந்த, அங்கஜன் ராமநாதன் ஆகியோர் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக கைச் சின்னத்தில் போட்டியிட சுதந்திர கட்சியின் அரசியல் சபை தீர்மானித்துள்ளது.

எனினும் அந்த கட்சியின் பொதுச் செயலாளர் அங்கம் வகிக்கும் குருநாகல் மாவட்டத்தின் சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் உலங்கு வானூர்திச்சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன உலங்கு வானூர்திச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

சாரதி துஷ்மந்த மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கை சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

எவ்வாறாயினும், சான் விஜயலால் டி சில்வா, கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் உலங்கு வானூர்திச் சின்னத்தில் போட்டியிடவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

இவ்வாறான பின்னணியிலே, அரசாங்கத்துக்கு ஆதரவளிக்காத சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த முரண்பாடுகளுக்கு மத்தியில் சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 11 ஆம் திகதி சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்ட தீர்மானித்துள்ளதாக கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# 15 இலங்கையர்களும் பாதுகாப்பாக உள்ளனர்

## தகவலறிய இரு விசேட இலக்கங்கள்

கொழும்பு, பெப். 08

துருக்கியில் நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அண்டிய பகுதியில் இருந்த 15 இலங்கையர்கள் பாதுகாப்பாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கிக்கான இலங்கை துதுவர் ஹசந்தி திஸாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், துருக்கியில் உள்ள தமது உறவினர்கள் தொடர்பான தகவல்களை அறியவும், அவர்கள் தொடர்பான தகவல்களை அறிய விசேட இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தகவல் பெறவேண்டியவர்கள் அங்காராவில் உள்ள இலங்கை தூதரகத்தினால் வழங்கப்பட்டுள்ள 009 03 124 271 032, 009 05 344 569 498 ஆகிய இரண்டு அவசர எண்கள் ஊடாக தொடர்பு கொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ)

# மைத்திரிபாலவை தூக்கிலிடவேண்டும்

## மொட்டுக் கட்சி எம்.பி. ஆவேசம்



கொழும்பு, பெப். 08

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஈஸ்டர் குண்டு தாக்குதல் குற்றவாளிகளைத் தூக்கில் தொங்கவிட்டுக் கொலை செய்ய வேண்டும் என பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும், இராஜாங்க அமைச்சருமான சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பில் வைத்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதல் மேலும் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதல் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தண்டனை போதாது.

இதைவிடப் பெரிதாக தண்டனை வழங்கி இருக்கவேண்டும்.

அப்பாவி மக்கள் கொல்லப்படும் வரை பார்த்துக்கொண்டிருந்த மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட குற்றவாளிகளைத் தூக்கில் தொங்கவிட்டுக் கொலை செய்ய வேண்டும்-என்றார். (அ)

# கோட்டாபய ராஜபக்ஷவிடம் 3 மணி நேரம் விசாரணை



கொழும்பு, பெப். 08

முன்னாள் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவிடம் மூன்று மணித்தியாலங்கள் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையிலிருந்து போராட்டக்காரர்களால் மீட்கப்பட்ட பணம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முன்னாள் ஜனாதிபதி கோட் டாபயவிடம் விசாரணை நடத் தினர்.

நீதிமன்ற உத்தரவிற்கு அமைய நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் வீட்டுக்கு சென்று விசாரணை நடத்தினர்.

மேலும் போராட்டக்காரர்களினால் மீட்கப்பட்ட பணம் கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஓய்வுபெற்ற டி.ஐ.ஜி வீட்டில் திருட்டில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு, பெப். 08

ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் சரத் லுகொடவின் கொஹூவளை இல்லத் தில் 17 இலட்சம் ரூபா பெறும தியான தங்க நகைகளை திரு டிய 19 வயதுடைய சந்தேக நபர் ஆனமடுவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபரை கல்கிஸை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தபோது, திருடப்பட்ட தங்கப் பொருட்கள் பல்வேறு இடங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதோடு, அவை அனைத்தும் உருக்கப்பட்டுவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் வீட்டிலிருந்தவர்கள் வெளியே சென்றிருந்த சந்தர்ப்பத்தில் குறித்த சந்தேகநபர் வீட்டுக்குள் புகுந்து திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார்.

சந்தேக நபர் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடுவதற்கு முன்னதாக ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபரின் வீட்டுக்கு முன்பாக கைத் தொலைபேசியை காதில் வைத்துக்கொண்டு காத்திருப்பது அங்கிருந்த சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தலங்கம, மிரிஹான மற்றும் கல்கிஸை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நவகத்தேகம, வெல்லவாவ வடக்கு பகுதியைச் சேர்ந்தவர் என்பதோடு, அவர் கல்கிஸை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஜனாதிபதியின் வரிக் கொள்கையை ஒரு வருடம் பொறுத்துக் கொள்ளுங்கள்!

## மக்களிடம் கோருகிறது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, பெப். 08

**ஜனாதிபதியின் வரிக்கொள்கை, உள்ளவர்களிடமிருந்து இல்லாதவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதாகும். ஒருவருடம் பொறுத்துக்கொண்டு இதனை மேற்கொண்டால் எமக்கு நாட்டை கட்டியெழுப்ப முடியும் என ஜனாதிபதியின் தொழிற் சங்கப் பணிப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.**

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் 75ஆவது சுதந்திர தினம் கொண்டாட்ட நிகழ்வு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் கொழும்பு நகரில் பல்வேறு இடங்களில் எதிர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்று வந்தன.

என்றாலும் இந்த போராட்டக்காரர்களுக்கு, அன்றைய தினம் மாலை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போது பல விடயங்களை நினைவுபடுத்தியிருந்தார். என்றாலும் நாட்டை அபிவிருத்தி பாதைக்கு கொண்டு செல்லும் ஜனாதிபதியின் பயணத்தை தடுப்பதற்கு பலவேறு அரசியல் கட்சிகள் முயற்சித்து வருகின்றன.

இவ்வாறு நாட்டை சீர்குலைக்க முயற்சித்து வருபவர்களே, சுதந்திர தினத்தில் கறுப்புக்கொடி ஏந்துமாறு மக்களை தூண்டி வந்துள்ளனர். நாடு இந்த நிலைக்கு வங்குரோத்து அடைவதற்கு பிரதானமாக செயற்பட்டவர்கள் இவர்களாவர்.

இதன் மூலம் வெளிநாடுகளின் உதவியை தடுப்பதே இவர்களின் நோக்கமாகும். அதேபோன்று மீண்டும் மக்களை வீதிக்கி இறக்குவதற்கே இவர்கள் முயற்சிக்கின்றனர்.

நாடொன்றின் சுதந்திர தின நிகழ்வின் போது இவ்வாறு மோசமாக செயற்படுபவர்களை நாங்கள் ஒருபோதும் கண்டதில்லை.

அத்துடன் கறுப்புக்கொடி ஏற்றுமாறு கூறியவர்கள்தான் 88/89 காலப்பகுதியில் நாட்டை அராஜகமாக்குவதற்கு பிரதான மாக செயற்பட்டவர்கள், இதற்கு மக்கள் விடுதலை முன்னணியே பொறுப்பு கூறவேண்டும்.

தற்போது தேர்தல் நடத்தா விட்டால் பார்த்துக்கொள்ளலாம் என எச்சரிக்கை விடுக்கின்றனர். நாட்டை அராஜக நிலைக்கு கொண்டுவந்தவர்களின் இறுதியிலேயே கோட்டாபய இணைந்துகொண்டார்.

அதேபோல் கிறிஸ்தவ மக்களும் கறுப்புக்கொடி ஏந்தி இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. கிறிஸ்தவ மதத் தலைவர், நாட்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு பின்னர், கோட்டாபயவை அதிகாரத்துக்கு கொண்டுவர பாரியளவில் செயற்பட்டார்.

அந்த ஆட்சியாளரால் நாடு பின்னடைவுக்கு சென்றது. இவ்வாறு வீழ்ச்சியடைந்த நாட்டை கட்டியெழுப்ப தற்போதுள்ள ஆட்சியாளருக்கு உதவி செய்யாமல், நாட்டை அராஜக நிலைக்கு கொண்டு செல்ல அவர் செயற்பட்டு வருகிறார்.

மேலும் வீழ்ச்சியடைந்திருக்கும் நாட்டை கட்டியெழுப்ப நாங்கள் தயார் என்றால் மாத்திரமே சர்வதேச நாணய நிதியம், ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் எமக்கு உதவுவதற்கு முன்வரும்.

அதனால் எமது நாட்டை கட்டியெழுப்ப தயார் என நாங்கள் அனைவரும் உலகுக்கு காட்டவேண்டும். அதேபோன்று ஜனாதிபதியின் வரிக் கொள்கை, உள்ளவர்களிடமிருந்து இல்லாதவர்களுக்கு பெற்றுக்கொடுப்பதாகும். ஒருவருடம் பொறுத்துக்கொண்டு இதனை மேற்கொண்டால் எமக்கு நாட்டை கட்டியெழுப்ப முடியும்-என்றார். (அ)

# பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியருக்கு மேலதிக நேர கொடுப்பனவு ரூ. 180 கோடி

கொழும்பு, பெப். 08

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கும் எண்ணெய் சேமிப்பு வளாகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இந்த வருடத்திற்கான மேலதிக நேர கொடுப்பனவாக 180 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் மேலதிக நேர கொடுப்பனவு செலுத்த ஒதுக்கப்படும் தொகையை அதிகரித்துள்ளன.

2022 இல் 179 கோடியும், 2021 இல் 168 கோடியும், 2020 இல் 160 கோடியும் ஒதுக்கப்பட்டது. (அ)

# ரோஹிதவின் நாயின் கழுத்தில் தங்கச்சங்கிலி

கொழும்பு, பெப். 08

மகிந்த ராஜபக்ஷவின் இளைய மகனின் வளர்ப்பு நாயின் கழுத்தில் பெருந்தொகை தங்கம் உள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்திருந்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் தேர்தல் பிரசார மேடையில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ரோஹிதவின் வளர்ப்பு நாயின் கழுத்தில் சுமார் 90 பவுண் எடையுடைய தங்கச் செயின் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவை அனைத்தும் திருடிய பணத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டன.

கடந்த 9ஆம் திகதியன்று வீடுகள் எரிக்கப்பட்டபோது சிங்கராஜவில் உள்ள ஹோட்டல் ஒன்றும் தீப்பிடித்திருந்தது. அதிலும் அந்த சொகுசு ஹோட்டலுக்கு உரிமையாளர் இல்லை. அதற்கு முன்னரும் உரிமையாளர் இருக்கவில்லை.

தீப்பிடித்தும் மாதக்கணக்கில் உரிமையாளர் இருக்கவில்லை.

ஆனால் பாராளுமன்றில் நட்டஈட்டுப் பணம் ஒதுக்கப்பட்டதும் உரிமையாளர்கள் வெளியே வந்தார்கள். குறித்த ஹோட்டலுக்கு 100 கோடி ரூபா செலவு காட்டப்பட்டுள்ளது. அதுவும் மக்கள் பணத்தில் ரொக்கட் அனுப்பிய மகிந்தவின் இளைய மகன் தான்.

திருமணம் முடித்ததும் 36 கோடி ரூபாய் பெறுமதியில் வீடு ஒன்றை வாங்கினார். அதற்கு அப்பால் உள்ள இரு இடங்களை வாங்கியுள்ளார். ரோஹிதவுக்கு 45 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்து உள்ளது - என்றார். (அ)

# கிழக்கு நோக்கிய பேரணி: பஸ் மீது கல் வீசி தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 08

யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த 04 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று, சுதந்திர தினத்துக்கு எதிரான பேரணி கிழக்கு நோக்கிப் புறப்பட்டது.

இவ்வாறு புறப்பட்ட பேரணியில் போராட்டக்காரர்கள் பயணித்த பஸ் மீது கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட இராணுவ முகாம் அருகில் இடம்பெற்ற குறித்த கல்வீச்சில் பஸ்ஸின் முற்பகுதி கண்ணாடி சேதமடைந்துள்ளது.

வலிந்து காணமலாக்கப்பட்டோரது உறவுகள் பயணித்த பஸ்ஸே இவ்வாறு கல்வீச்சு தாக்குதலுக்குள்ளாகியுள்ளது. (அ)

# தேர்தலை காலம்தாழ்த்த அரசு திட்டமிடுகின்றது!

## எதிர்க்கட்சியும் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 08

தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் பல்வேறு வழிகளிலும் முயற்சித்து வருகிறது. ஆனால், அந்த முயற்சிகள் வெற்றியளிக்கப் போவதில்லை. மாறாக, ஏதேனுமொரு வழியில் தேர்தல் காலம் தாழ்த்தப்படுமாயின் அதற்கு எதிராக சர்வதேசத்தை நாடுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம். மக்கள் மத்தியிலும் தேர்தலுக்கான எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன. ஆனால், தேர்தலை எதிர்கொள்வதில் காணப்படும் அச்சத்தால் பல்வேறு வழிகளிலும் அரசாங்கம் அதனைக் காலம் தாழ்த்த முயற்சிக்கின்றது.

தேர்தல் செலவுகளுக்கு வழங்குவதற்கு பணம் இல்லை என்று கூறுவதற்கு அரசாங்கம் வெட்கப்பட வேண்டும். நிதி நெருக்கடியால் தேர்தல் செலவுகளுக்கான பணத்தை வழங்குவது சிக்கல் என்று நிதி அமைச்சு நீதிமன்றத்துக்கும் அறிவித்துள்ளது. ஆனால் இது போன்று தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு முயற்சிகளும் வெற்றியளிக்காது.

மாறாக ஏதேனுமொரு வழியில் அரசாங்கம் தேர்தலைக் காலம் தாழ்த்தினால் , ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும் மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காகவும் சர்வதேசத்தை நாடுவோம். அரசாங்கம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இதுவரையிலும் முன்னெடுக்கவில்லை. இது தேர்தல் இடம்பெறுமா என்பதில் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

வேதனையான எதிர்காலம் காணப்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். ஆனால் அதற்கு என்ன தீர்வு என்பதை அவர் குறிப்பிடவில்லை. தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்படுட்டுக் கொண்டிருக்கிறது. எனவே அதன் செயல்பாடுகளுக்கு அரசாங்கம் வெற்றியளிக்க வேண்டும் - என்றார். (ஐ)

# இந்த வருடம் இலங்கையர்களுக்கு 6,500 கொரிய வேலை வாய்ப்புகள்

கொழும்பு, பெப். 08

2023ஆம் ஆண்டில் இலங்கையர்களுக்கு 6,500 கொரிய வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இது கடந்த ஆண்டை விட 28 .79 வீத அதிகரிப்பு என்பதுடன், இலங்கை வரலாற்றில் கொரிய வேலைவாய்ப்பு அதிகமாக வழங்கப்பட்ட ஆண்டு என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரிய வேலைவாய்ப்பிற்காக 14,588 விண்ணப்பதாரர்களை காத்திருப்போர் பட்டியலில் உள்ளடக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, உற்பத்தித் துறையில் 12,189 பேருக்கும் மீன்பிடித் துறையில் 2,149 பேருக்கும் நிர்மாணத்துறையில் 250 பேருக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.(அ)

# அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மக்களின் நலன்களுக்கானதாக இருக்க வேண்டும்



- கலாநிதி ஜெகான் பெரேரா

இலங்கை காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்டு பெற்ற சுதந்திரத்தின் 75 வது வருட நிறைவை அரசாங்கம் பலத்த பாதுகாப்பின் கீழ் கொண்டாடியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த கொண்டாட்ட நிகழ்வில் ஒரு உரையை நிகழ்த்தவில்லை. தயாரிக்கப்பட்ட உரை சிறப்பானதாக இருந்தது. ஆனால் அது பின்னரே விநியோகிக்கப் பட்டது. இராணுவ அணிவகுப்பு நடைபெற்ற கொழும்பு காலிமுகத்திடலில் பொது மக்களின் பங்கேற்பு தவிர்க்கப்பட்டமை சுதந்திர தின நிகழ்வில் அவதானிக்கக்கூடியதாக இருந்த இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வழமையான சூழ்நிலைகளில், சுதந்திர தின கொண்டாட்டங்களின் போது காலிமுகத்திடலில் கரையோரக் காற்றையும் விரிந்து பரந்த பசுமையான மைதானத்தையும் ரசிக்க மக்கள் கூட்டம் நிரம்பிவழியும். மக்கள் பங்கேற்க அனுமதிக்கப்பட்டிருந்தால் கண்கவரும் இராணுவ அணிவகுப்பையும் விமானப்படையின் சாகசங்களையும் கண்டு ரசிக்க அவர்கள் தவறியிருக்கமாட்டார்கள். ஆனால் பாதுகாப்பின்மை உணர்வுடன் இருக்கும் அரசாங்கம் நிலைவரத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பியது என்பது தெளிவாக தெரிந்தது. அதனால் பெருமளவில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

மக்கள் அனுமதிக்கப்பட்டிருந்தால் அவர்களில் சிலர் ஆர்ப்பாட்டத்தில் இறங்கக்கூடும் என்று அரசாங்கம் அஞ்சிய காரணத்தினாலேயே பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை. முதல்நாள் இரவு பெரும்பாலும் இளைஞர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு சத்தியாக்கிரகத்தை தண்ணீர்ப் பீரங்கி தாக்குதல் நடத்தி பலவந்தமாக கலைத்தனர். நாட்டு மக்கள் கொண்டாடுவதற்கு பெரிதாக எதுவும் இல்லாத ஒரு நேரத்தில் சுதந்திர தின நிகழ்வுக்காக பெருமளவு நிதி வீணாக ஒதுக்கப்பட்டதை ஆட்சேபித்தே இளைஞர்கள் அந்த சத்தியாக்கிரகத்தை முன்னெடுத்தனர்.

பெருமளவு பாதுகாப்பு படையின் பிரசன்னம் இருந்தபோதிலும் அமைதியான முறையில் போராட்டத்தைச் செய்தவர்கள் குண்டர் குழுவொன்றின் தாக்குதலுக்கு இலக்காகினர். சத்தியாக்கிரகிகள் பொலிசாரின் நடவடிக்கையை எதிர்த்து நின்றபோது அவர்கள் தாக்கப்பட்டு விரட்டப்பட்டதுடன் கைதுசெய்யப்பட்டனர். எந்தவித குழப்பமும் இன்றி சுதந்திர தின கொண்டாட்டங்களை நடத்துவதில் அரசாங்கம் குறியாக இருந்ததே தவிர மக்களின் மனங்களை வென்றெடுப்பதில் அக்கறை காட்டவில்லை.

கொண்டாட்ட அரங்கில் பொதுமக்களின் பங்கேற்பு இல்லாமல் வீதியெங்கும் பொலிசாரும் படையினரும் பெருமளவில் குவிக்கப்பட்டு சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட விதம் கடந்த தசாப்தங்களில் நாடு முகங்கொடுத்த போர்க் காலத்தை நினைவுபடுத்தியது. அந்த நாட்களில் சுதந்திர தின கொண்டாட்டங்கள் கடுமையான பாதுகாப்பின் கீழ் இடம்பெற்ற அதேவேளை விடுதலை புலிகள் குண்டுத்தாக்குதல்களை நடத்தக்கூடும் என்ற அச்சத்தில் மக்கள் வீடுகளில் பாதுகாப்பாக இருப்பதையே விரும்பினார்கள்.



மக்களின் வாழ்வில் பெரும் அவலங்களை ஏற்படுத்தியிருக்கும் தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு பல வருட காலப்போர் பெருமளவில் காரணமாக இருந்ததால் அந்த கடந்த காலத்தை மீட்டுப்பார்ப்பது இன்று பொருத்தமானதேயாகும். சனத்தொகையில் 70 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் தாங்கள் உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்திருப்பதுடன் 40 சதவீதமானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இனநெருக்கடிக்கும் பொருளாதார அபிவிருத்தியின்மைக்கும் இடையிலான தொடர்பை ஏற்றுக்கொண்டவராக ஜனாதிபதி விக்கிரமசிங்க இனநெருக்கடிக்கு தாமதமின்றி அரசியல் தீர்வொன்றைக் காணும் முயற்சிகளுக்கு முன்னுரிமையைக் கொடுத்திருக்கிறார்.

**ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் முன்னுரிமை கொடுக்கின்ற விவகாரங்கள் குறித்து கண்டன விமர்சனங்கள் இருக்கின்ற போதிலும், தேசிய நலன்களுக்கு உகந்த முறையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஜனாதிபதி வெற்றி காண்பார் என்று தொடர்ந்து நம்பிக்கை வைப்பவர்களும் இருக்கிறார்கள். ஜனாதிபதியின் துணிச்சலான சூளுரைகளில் ஒன்று மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வைக் கண்டு 75ஆவது சுதந்திர தினத்தில் தேசிய நல்லிணக்கத்தை எட்டி ஒரு தாய் மக்கள் போன்று ஐக்கியப்படுவதாகும்.**

**மக்களின் கோபம்**

சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தலைநகர் கொழும்பில் மாத்திரம் தான் இடம்பெற்றன என்றில்லை. நாட்டின் ஏனைய பகுதிகளிலும் குறிப்பாக வடக்கிலும் இடம்பெற்றன. பிரதான தமிழ் கட்சியும் சிறிய கட்சிகளும் சுதந்திர தின நிகழ்வுகளைப் பகிஷ்கரிக்குமாறு அழைப்பு விடுத்தது அவற்றில் பங்கேற்க வில்லை. யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் ஹர்த்தாலைப் பிரகடனம் செய்து கறுப்புக்கொடி களைப் பறக்கவிட்டனர். ஆனால் பெரும்பாலான மக்கள் சுதந்திர தினக்கொண்டாட்டங்களிலோ அல்லது அதற்கு எதிரான போராட்டங்களிலோ அக்கறை காட்ட வில்லை.

தன்னியல்பான முறையில் மக்கள் தேசியக்கொடிகளைப் பறக்க விடவும் இல்லை. அரசாங்கமும் அவ்வாறு செய்யுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கவுமில்லை. அரசாங்கம் ஏதோ தனக்காக சுதந்திரதினத்தைக் கொண்டாடியது போன்று தோன்றியது. பொலிசாரின் பாதுகாப்புடன் பளபளக்கும் வாகனங்களில் வந்திறங்கிய ஆளுநர்களும் அமைச்சர்களும் ஏனைய விருந்தினர்களும் காலிமுகத்திடல் சுதந்திரதின கொண்டாட்ட அரங்கில் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த பந்தல்களில் அமர்ந்ததை தேசிய தொலைக்காட்சிகளில் காட்டினர். ஆனால் தங்களது தொலைக் காட்சிப் பெட்டிகளின் முன்னால் இருந்து அவற்றைப் பார்த்த மக்கள் ஆடம்பர வாகன வரிசைகளைக் கண்டு ஆத்திரமடைந்திருப்பார்கள்.

ஒரு வருடத்துக்கும் குறைவான காலத்துக்கு முன்னர், தேசிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வங்குரோத்து நிலை பிரகடனம் செய்யப்பட்டதையடுத்து வீதிக்கு இறங்கி மக்கள் செய்த கிளர்ச்சிக்கு மத்தியில் இதே அரசியல் தலைவர்கள் பதுங்கியிருந்தார்கள். பொதுப் போராட்டங்களில் ஒருபோதுமே பங்கேற்காத மக்களும் வீதிகளுக்கு இறங்கியதைக் காணக்கூடியதாக இருந்தது. நாட்டின் செல்வத்தைச் சூறையாடி தங்களை பிச்சைக்காரர்களாக்கிவிட்ட அரசாங்கத் தலைவர்கள் வெளியேற வேண்டுமென்று கோருவதற்கு குழந்தைகளுடன் தாய்மார், வயோதிபர்கள், உடல் ஊனமுற்றவர்கள் என்று சமூகத்தின் பல பிரிவினரும் தொலைதூர இடங்களில் இருந்தும் போராட்டக்களங்களுக்கு திரண்டு வந்தார்கள்.

அதே மக்கள் தாங்கள் அன்றாட வாழ்க்கையை ஓட்டுவதற்கே திணறிக் கொண்டிருக்கும்போது அதே அரசியல்வாதிகள் ஆடம்பர வாகனங்களில் வந்து சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதை தொலைக் காட்சிகளில் பார்த்து கொதிப்படைந் திருப்பார்கள். ஊழலையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் செய்துவிட்டு அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தண்டனை எதுவும் இன்றி சுதந்திரமாக ஆடம்பர வாழ்க் கையை நடத் தும் போக்கிற்கு மடிவு கட்ட வேண்டும் என்றே அரசாங்கத்தை மக்கள் கோருகிறார்கள். ஆனால் அதை அர சாங்கம் செய்யத் தயங்குகிறது போன்று தெரிகிறது.

இத்தகைய பின்புலத்தில் சுதந்திர தினம் இந்த வகையாக யாருக்காகக் கொண்டாடப்படுகிறது என்ற கேள்வி எழுகிறது. பொருளாதாரம் படுமோசமாக வீழ்ச்சியடைந்திருக்கும் நிலைவரத்துக்கு மத்தியில் கற்பனை செய்து பார்த் திருக்கமுடியாத முறையில் சுதந்திரதினம் கொண்டாடப்பட்டிருக்கிறது. நிகழ்வுக் கான செலவு தொடர்பில் மக்களின் ஆட் சேபத்தை கருத்தில் எடுக்க அரசாங்கம் முயற்சித்து இராணுவ அணிவகுப்பின் அளவைக் குறைத்தது. வாழ்வின் அழகியல் பக்கத்தைப் பிரதிபலிக்கும் கலாச்சார அணிவகுப்புக்களும் நிறுத்தப்பட்டன.

சுதந்திரதினம் வேறுபட்ட முறையில் அதாவது அரசியல் தலைவர்களுக்காகவோ சர்வதேச சமூகத்துக்காகவோ அன்றி மக்களுக்காக கொண்டாடப் பட்டிருக்கவேண்டும். இந்த நிகழ்வு பெருமளவுக்கு சர்வதேச கவனத்தைப் பெற வில்லை. எம்மை உலகம் பார்க்கின்ற முறையை அது மாற்றவில்லை. அது இலங்கை மக்களின் இதயங்களையும் தொடவில்லை. சுதந்திர தினக் கொண்டாட்டங்களை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டு அவர்கள் நிச்சயமாக தங்களது நலன்களுக்கு உதவாத அந்த செலவினங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்திருப்பார்கள்.

**துணிச்சலான உறுதிமொழிகள்**

சுதந்திர தினக் கொண்டாட்டத்தை வேறுபட்ட முறையில் நடத்தியிருக்க முடியும். மக்களின் வாழ்வைப் பாழ்படுத்தியிருக்கும் வறுமையை அரசாங்கம் உணர்ந்து நடந்துகொண்டிருக்கமுடியும். மக்கள் மீது அக்கறை காட்டும் பண்புகளை வெளிக்காட்டக்கூடிய முறையில்

(09ஆம் பக்கம் பார்க்க)

# பொதுவுடைமை இலட்சியத்துக்காக வாழ்நாளை அர்ப்பணித்த சண்முகதாசன்



**காலஞ்சென்ற கம்யூனிஸ்ட் தலைவர் என். சண்முகதாசன் அவர்களின் மறைவையடுத்து 1993 முற்பகுதியில் லண்டனில் 'இனமும் வர்க்கமும்' (Race and Class) சஞ்சிகையின் ஆசிரியர் ஏ.சிவானந்தன் எழுதிய அஞ்சலிக் குறிப்பு இன்று அவரது 30ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு மீள்பிரசுரம் செய்யப்படுகிறது.**

மூன்றாம் உலக நாடு ஒவ்வொன்றிலும் புரட்சி செய்வதில் வெற்றிபெறாத ஒரு பிடெல் காஸ்ட்ரோவோ, அமில்கார் கப்ராலோ அல்லது என்குயென் கியாப்போ இருக்கவே செய்கிறார்கள். ஆனால் அவர்கள் அநீதிக்கும் சகிப்புத்தன்மையின்மைக்கும் அசமத்துவத்துக்கும் எதிரான தங்களது போராட்டத்தில் புரட்சிவாதிக்குரிய பண்புகளையும் நேர்மையுடனான ஒழுக்க முறையையும் அர்ப்பணிப்பு உணர்வையும் உருவகப்படுத்தி நிற்பதன் மூலமாக சோசலிசத்தின் விதைகளை ஆழமாக வேரூன்றச் செய்திருக்கிறார்கள். சண்முகதாசன் அத்தகைய ஒரு மனிதரே.

அவரைப் பொறுத்தவரை, சோசலிசத்தை அடைவதற்கு குறுக்குவழி கிடையாது. பாராளுமன்றப் பாதையும் அதற்கு கிடையாது. இலக்குகளுக்கும் வழிமுறைகளுக்கும் இடையே விட்டுக்கொடுப்பும் இருக்கமுடியாது. அதனால் அவரால் ஒருபோதும் அதிகாரத்தை எட்ட முடியவில்லை. ஒரு தடவை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டபோதிலும் கூட பாராளுமன்ற உறுப்பினராகவும் அவரால் வரமுடியவில்லை.

சண் தனது அரசியல் போக்கை ஜனரஞ்சக அரசியலாக ஒருபோதும் தாழ்த்திக்கொண்டதுமில்லை. அவ்வாறிருந்தாலும் அவர் ஒரு மக்களின் தலைவன். தொழிலாளர் வர்க்கத்தின் சேவகன்.

1939 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தில் மார்க்சியத்தை அறிந்துகொண்ட தருணம் முதல் மரணமடையும் வரை சண் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் வர்க்கங்கள் இல்லாத சமூகத்தை அடையும் வேட்கைக்குமான இலட்சியத்துக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

முதலில் லெனினையும் சோவியத் கம்யூனிசத்தையும் பின்பற்றிய சண் 1963 ஆம் ஆண்டுக்கு பிறகு வழிகாட்டலுக்காக மாவோ சேதுங்கின் சீனா நோக்கித் திரும்பினார். அந்தப்பயணத்தில் அவர் தொழிற்சங்கவாதியாக, தத்துவார்த்தியாக, வாதப்பிரதிவாதம் செய்பவராக, கட்டுரையாளராக, போராளியாக, சேவக னாக விளங்கினார்.

நம்பிக்கையற்றதாக தோன்றிய இலட்சியங்களுக் காக குரல்கொடுப்பதற்கு தயங்காத சண் தனது செயற் பாடுகளின் மூலமாக அந்த இலட்சியங்களை நம்பிக்கைக் குரியவையாக்கினார்.

டி.எஸ்.சேனநாயக்கவின் அரசாங்கம் இந்திய வம்சா வளி தோட்டத்தொழிலாளர்களின் குடியுரிமையயும் வாக்குரிமையையும் பறித்ததையடுத்து அந்த மக்கள் இடதுசாரி அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை தேர்தல் நோக்கங்களுக்காக தீண்டத்தகாதவர்களானார் கள். ஆனால் செங்கொடி சங்கத்தின் மூலமாக தோட்டத் தொழிலாளர்களின் இலட்சியங்களுக்காக குரல் கொடுத்த சண் அவர்களுக்கு போராட்ட உணர்வை ஊட்டினார்.

இந்து சமுதாயம் அதன் வெறித்தனமான சாதி அடக்குமுறைக் கட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கோவில் கதவுகளை மாத்திரமல்ல, பொது இடங்களின் கதவுகளையும் மூடியபோது 'உயர்சாதி" இந்து குடும்பத்தைச் சேர்ந்தவரான சண் பிராமணர்களின் மாடங்களுக்குள் அந்த மக்களை வழிநடத்திச்சென்று மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டினார்.

பாரம்பரிய அர்த்தத்தில் சண் ஒரு குரு. முன்னுதாரணத்தாலும் போதனையாலும் அவர் ஒரு ஆசிரியர். பொதுவாழ்க்கையிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஒரு உதாரண புருசர். இலங்கையின் அரசியல் சமுதாயம் முற்றுமுழுதாக ஊழல்தனமானதாக மாறியிருந்த ஒரு நேரத்தில் பணத்துக்கு விலைபோகும் குணத்தினாலோ அல்லது அதிகார மோகத்தினாலோ தீண்டப்படமுடியாதவராக சண் விளங்கினார்.

இலங்கையில் புத்திஜீவித்துவ வாழ்வு கீழ்த்தரமானதாகவும் அருவருக்கத்தக்கதாகவும் மாறியிருந்த ஒரு நேரத்தில் சண் இருண்ட உலகின் ஒரு தீபம் போன்று தனது புத்திஜீவித்துவ நேர்மையை வெளிக்காட்டினார். இலங்கை மிகவும் கொடூரமான இனவாத வன்முறைக்குள் மூழ்கிக்கிடந்த ஒரு நேரத்தில் சண் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏகோபித்த நீதி வேண்டிக் குரல்கொடுத்தார்.

மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் அவர் கண்ட வேறுபாடு ஒரு கோட்பாட்டு அடிப்படையிலான நவீனத்துவம் அல்ல, மாறாக ஆழமான ஒரு மெய்யுணர்வாகும். மற்றெவரையும் விட முன்கூட்டியே நிலைவரங்களைப் புரிந்துவிளங்கிக் கொள்ளக்கூடிய சிறப்புவாய்ந்த இயங்கியல் சிந்தனையாற்றலை கொண்டிருந்த சண் தான் தலைமை தாங்கிய மக்களை விடவும் முன்கூட்டியே விடயங்களை தெரிந்துகொள்கிற ஒரு அரசியல் இயல்புணர்ச்சியைக் கொண்டவராகவும் விளங்கினார்.

ஒரு அர்த்தத்தில் நோக்கும்போது சண் தனது காலத்துக்கு முந்தியவர் மாத்திரமல்ல, ஆழ்கடலின் நடுவில் தெரியும் மலைக்குன்றைப் போன்றவர். ●



## அரசாங்கத்தின் நடவடிக்கைகள்.....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர தின நிகழ்வை அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கமுடியும். நாடு பூராவும் இருந்து சகல இனங்களையும் மதங்களையும் சாதிகளையும் சேர்ந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த ஆயாரக்கணக்கான பாடசாலை சிறார்களை அழைத்து வந்து பாடசாலைப் புத்தகங்களையும் சீருடைகளையும் ஒரு அடையாளபூர்வமாக அன்பளிப்புச் செய்து நாட்டின் சிறுவர்களில் முதலீடு செய்வதில் அரசாங்கத்துக்கு இருக்கும் கடப்பாட்டை வெளிக்காட்டியிருக்கலாம்.

இது அரசாங்கம் தவறவிட்ட -அதற்கு பெரும் பாதகமாக அமையக்கூடிய ஒரு சந்தர்ப்பமாகும். எதார்வரும் உள்ளுராட்சி தேர்தலில் இதன் தாக்கத்தை உணரக்கூடியதாக இருக்கும். 2048 ஆம் ஆண்டில் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க கொண்டிருக்கும் திட்டம் அன்றாட வாழ்க்கையை பற்றி கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களின் கவனத்தைப் பெறவில்லை. 'ஒரு தாயின் பிள்ளைகள் போன்று ஐக்கியப்படுவதற்கு எங்களை நாம் அர்ப்பணிப்போம். சுதந்திரத்தின் நூற்றாண்டைக் கொண்டாடப் போகும் 2048 ஆம் ஆண்டளவில் உலகின் மிகவும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒன்றாக இலங்கையை மாற்றுவதற்கு எம்மை அர்ப்பணிப்போம்" என்று தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் முன்னுரிமை கொடுக்கின்ற விவகாரங்கள் குறித்து கண்டன விமர்சனங்கள் இருக்கின்ற போதிலும், தேசிய நலன்களுக்கு உகந்த முறையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஜனாதிபதி வெற்றி காண்பார் என்று தொடர்ந்து நம்பிக்கை வைப்பவர்களும் இருக்கிறார்கள். ஜனாதிபதியின் துணிச்சலான சூளுரைகளில் ஒன்று மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வைக் கண்டு 75 வது சுதந்திர தினத்தில் தேசிய நல்லிணக்கத்தை எட்டி ஒரு தாய் மக்கள் போன்று ஐக்கியப்படுவதாகும்.

இந்த பணி தொடர்பில் மூன்று மாதங்களுக்கு முன்னர் அவர் முதலில் தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியபோது சுதந்திர தினத்துக்கு முன்னதாகக்கூட அந்தப் பணி நிறைவேற்றப்பட்டு விடக்கூடும் என்று ஒருவகை எதிர்பார்ப்பு இருந்தது. பணி நிறைவேற்றம் குறித்து சுதந்திரதின சுபவேளையிலேயே அறிவிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்வாறு அமையவில்லை. முதல் அடி கூட இன்னும் எடுத்துவைக்கப்படவில்லை என்றே தோன்றுகிறது. பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்துவைத்து பெப்ரவரி 8 ஜனாதிபதி நிகழ்த்தவிருக்கும் கொள்கைவிளக்க உரை மீது இப்போது கவனம் திரும்பியிருக்கிறது.

இன அடிப்படையில் பிளவுபட்ட சமுதாயம் ஒன்றில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதென்பது எளிதான காரியம் அல்ல. பல துறைகளையும் சேர்ந்த பல பிரிவினரின் ஆதரவு அதற்கு தேவை. இது தொடர்பில் ஜனாதிபதியின் உறுதிப்பாட்டின் அறிகுறி சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் தேசியகீதம் இசைக்கப்பட்டதன் மூலம் வெளிப்பட்டது. நான்கு வருட இடைவெளிக்குப் பிறகு இவ்வாறு நடைபெற்றிருக்கிறது. கடந்த காலப் பிளவுகளை வெற்றிகொள்வதில் ஜனாதிபதிக்கு இருக்கும் உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது.

பல தசாப்தங்களுக்கு பிறகு சுதந்திர தினத்தன்று தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த 2015 - 2019 காலப்பகுதியில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. சிவில் சமூகத்திடமிருந்து ஆதரவை வேண்டிநிற்கும் அம்சங்கள் ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் இருக்கின்றன. கடந்த கால தவறுகளின் மரபை நாம் வெற்றிகொண்டு படிப்பினைகளைப் பெற்று தவறுகள் மீண்டும் இழைக் கப்படாத ஒரு எதிர்காலத்தை நோக்கி நாம் பயணத்தை தொடங்க வேண்டியது அவசியமாகும். ●

# 3 எம்.பிக்கள் பங்குபற்றிய விருந்தில் துப்பாக்கிச் சூடு

## விசாரணைகளை ஆரம்பித்தது பொலிஸ்

கொழும்பு, பெப். 08

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நுவரெலியாவில் உள்ள விடுதியில் சிறிலங்கா பொதுஜன பெர முனவின் மூன்று உறுப்பினர்கள் தலைமையிலான விருந்துபசா ரத்தின்போது இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர் பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த விடுதியின் பராமரிப்பாளர் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கயஷான் நவநந்த, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ, கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக்க மற்றும் அவர்களுடன் வந்திருந்த 30 பேர் கொண்ட அதிதிகள் குழுவினர் கடந்த ஜனவரி 28 ஆம் திகதி இரவு அங்கு விருந்தொன்றை நடத்தியுள்ளனர்.

அன்றிரவு 12:00 - 12: 15 வரை இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும், மறுநாள் துப்புரவுப் பணிகளின் போது இரண்டு 9 மி.மீ வெற்று தோட்டா உறைகளும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பாராளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தசநாயக்கவுக்கு தெரியப்படுத்தியதையடுத்து, விடுதியின் முகாமையாளர் கடந்த 4ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பின்னர், நுவரெலியா பொலிஸ் குற்றப்பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், அன்றைய தினம் பணிபுரிந்த மூவரிடமும் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

எவ்வாறாயினும், துப்பாக்கிச் சூட்டில் எந்தவிதமான சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் மற்றும் யார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள் என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.(அ)

# இன்றைய பாராளுமன்ற அமர்வை த. தே. ம. முன்னணி புறக்கணிக்கும்

யாழ்ப்பாணம், பெப். 08

இன்று புதன்கிழமை ஆரம்பமாகும் பாராளுமன்றத்தின் 4ஆவது கூட்டத்தொடரின் முதலாவது அமர்வை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி புறக்கணிக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே, திருட்டு அரசாங்கத்தினதும் திருட்டு ஜனாதிபதியினதும் பெருமைகளை உயர்த்துகின்ற நிகழ்வுகளில் நாம் கலந்துகொள்ள முடியாது - என்று அவர் கூறினார். (ஐ)

# கஞ்சாவுடன் வேட்பாளர் கைது!

கொழும்பு, பெப். 08

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபையில் ஹெலிகொப்டர் சின்னத்தில் போட்டியிடும் சுதந்திர மக்கள் கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவர் 2400 மில்லி கிராம் கஞ்சாவுடன் மீகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மீகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் குழுவினர், சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்துகொண்ட இவரைச் சோதனையிட்ட போது, அவரிடம் கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேக நபர் ஆயுர்வேத திணைக்களத்தின் சிற்றூழியர் மற்றும் வட்டரெக்க பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர். அவர் நேற்று முன்தினம் மாலை ஹோமாகம நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவிருந்தார். (அ)

# பள்ளிவாசலை விடுவிக்குமாறு காத்தான்குடியில் ஹர்த்தால்

மட்டக்களப்பு, பெப். 08

பொலிஸாரால் கையகப் படுத்தப்பட்டுள்ள புதிய காத்தான்குடி, கப்பல் ஆலீம் வீதியிலுள்ள தாருள் அதர் பள்ளிவாசலை விடுவிக்கு மாறு கோரி நேற்று முன்தினம் காத்தான்குடியில் ஹர்த்தால் இடம்பெற்றது.

ஹர்த்தால் காரணமாக வர்த்தக ஸ்தாபனங்கள், சந்தைகள் மூடப் பட்டு, இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

இதன்போது, தாருள் அதர் பள்ளிவாசலுக்கு முன்பாக, அப்பகுதி பொதுமக்கள், காத்தான் குடி நகர சபை உறுப்பினர்கள், காத்தான் குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# கட்டுமான தொழில் நெருக்கடி; 10 இலட்சம் பேர் வேலையிழப்பு

கொழும்பு, பெப். 08

கட்டுமானத் தொழில் எதிர்கொள்ளும் நெருக்கடியால் மேசன், உதவியாளர் கள் மற்றும் கட்டடப் பொருள் வழங்குநர்கள் உட்பட 10 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் வேலை வாய்ப்பை இழந்துள்ளனர் என்று தேசிய கட்டுமான சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டட நிர்மாண பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக அப்பொருட்களை விநியோகிக்கும் கிட்டத்தட்ட 5 ஆயிரம் நிறுவனங்கள் முற்றாக மூடப்பட்டுள்ளன. இந்நிலைமையால் அந்த நிறுவனங்களில் பணியாற்றிய இலட்சக்கணக்கானோர் வேலை இழந்துள்ளனர்.

சீமெந்து மற்றும் இரும்பு கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வும் தட்டுப் பாடும் தான் கட்டுமானத் தொழிலின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் - என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனிடையே மூலப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் அதிக விலை காரண மாக, அடுக்குமாடி குடியிருப்பு உட்பட 20இற்கும் மேற்பட்ட பெரியளவிலான கட்டுமான நிறுவனங்களும் முடங்கியுள்ளன என்று கூறப்படுகின்றது. (ஐ)

கல்வி tv CHANNEL-1

**08.02.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**08.02.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# முஸ்லிம்களின் வரலாற்றைத் திட்டமிட்டு அரசியல் சூனியத்துக்குள் தள்ள சூழ்ச்சி!

## சட்டத்தரணி மர்சூம் மௌலானா குற்றச்சாட்டு



அம்பாறை, பெப். 08

**"இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை திட்டமிட்டு அரசியல் சூனியப் புள்ளிக்குள் தள்ளிவிடும் சூழ்ச்சியும் தொடர்கின்றது." இவ்வாறு, முஸ்லிம் மரபுரிமைகள் முகா மைத்துவ நிலையத்தின் தலைவர் சட்டத்தரணி மர்சூம் மௌலானா கூறினார்.**

முஸ்லிம் மரபுரிமைகள் முகா மைத்துவ நிலயத்தின் ஏற்பாட் டில் இடம்பெற்ற இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின நிகழ் வுக்கு தலைமை வகித்து உரை யாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

நிலையத்தின் தலைமைக் காரியாலயமானை நிந்தவூர்ஸா லிமிய்யா நல்லிணக்க மைய மண் டபத்தில் நிகழ்வு நடை பெற்றது.

இந்த நிகழ்வில் நிந்தவூர் பிர தேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். கே.எல்.எம்.நயீஸ் பிர தம அதிதியாகக் கலந்து கொண் டார்.

அத்துடன் பேராதனைப் பல் கலைக்கழக சிரேஷ்ட விரிவுரை யாளர் முபிலால் அபூபக்கர், நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி அதிபர் ஹாமிம் ஸதகா ஆகியோர் கௌரவ அதிதிகளா கவும் கலந்து கொண்டனர்.

ஆரம்பத்தில் இலங்கையின் தேசியக் கொடி ஏற்றப்பட்டு அல் - ஹாஜ் நபருல்லா மௌலா னாவினால் விஷேட துஆ பிரார்த் தனையும் நடத்தப்பட்டது.

தலைவர் சட்டத்தரணி மர் சூம் மௌலானா தொடர்ந்து உரையாற்றுகையில்-இலங்கைக் கான சுதந்திரத்தை அன்று உள் ளக சமூக முரண்பாடுகள் தாம தப்படுத்தும் கள நிலையினைத் தீர்க்கமாக உணர்ந்த மர்ஹூம் டாக்டர். ரி.பி.ஜாயா,

பிரித்தானியர்களிடமிருந்து நிபந்தனையற்ற சுதந்திரத்தைக் கோர வேண்டியதன் அவசி யத்தை நாட்டின் தலைவர்களுக் குத் தெளிவூட்டி நமது சுதந்திர தாகத்தைத் தீர்த்தார் என்ற வலாற்று உண்மையை மறந்து விட முடியாது.

இந்த வகையிலும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது நமக்கான பூரண உரிமையாகும்.

இவ்வாறெல்லாம் நாட்டை நேசித்தவர்களென மார்தட்டும் உரிமை கொண்ட இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை திட் டமிட்டு அரசியல் சூனியப் புள் ளிக்குள் தள்ளிவிடும் சூழ்ச்சியும் தொடர்கின்றது.

ஆனாலும் முஸ்லிம்களின் நீண்ட நெடிய வரலாறு சிதைக் கப்படுவதற்கு எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது.

எனவே தான் இந்த நாட்டு முஸ்லிம்களின் மரபுரிமைக ளைப் பாதுகாக்கும் பொறுப்பு மிக்க பணியை முன்னெடுக்கின் றோம் - என்றார். (அ-06)



# மாற்றுத்திறனாளிகளுக்கு உலர் உணவுப் பொருட்கள்

மட்டக்களப்பு, பெப். 08

மட்டக்களப்பு, கோறளைப் பற்று பிரதேச செயலாளர் பிரி வில் வீட்டுத்தோட்டம் செய்யும் விசேட தேவையுடையோருக்கு உலர் உணவு பொருட்கள் வழங் கும் நிகழ்வு நேற்று (06) சமூக பராமறிப்பு காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது, வாழ்வின் உத யம் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் அங்கத்தவர்கள் 128 பேர், வை.எம்.சி.ஏ நிறுவ னத்தின் அனுசரனையில் வீட் டுத் தோட்ட செய்கையில் ஈடு பட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு அரிசி, சீனி, பருப்பு, கடலை, தேயிலை, கோதுமை மா, சோயா மீட், சமபோச போன்ற 10,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப் பட்டன.

சமூக சேவை உத்தியோகத் தர் எஸ். ஜெயசேகர் தலைமை யில் இடம்பெற்ற நிகழ்வில், கோறளைப்பற்று உதவி பிர தேச செயலாளர் திருமதி அம லினி கார்த்தீபன், சமூக சேவை திணைக்கள அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி பிரேமானந்த சுதர்சினி, வை.எம்.சி.ஏ நிறுவ னத்தின் மட்டக்களப்பு மாவட்ட பதில் பொது செயலாளர் எஸ். பெற்றிக் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கொள்திறன் அபிவிருத்திக்கு இரு நாள் பயிற்சிப் பட்டறை

மட்டக்களப்பு, பெப். 08

மட்டக்களப்பு மாவட்டத் தின் 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்க ளின் கொள்திறனை அபி விருத்தி செய்வதற்கான இரு நாள் பயிற்சி பாசறை நேற்று முன் தினம் மட்டக்களப்பில் உள்ள தொழில் வழிகாட்டல் நிலையத்தின் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் மனித வலு வேலைவாய்ப்பு திணைக்களம் ஆகி யவற்றின் ஏற்பாட்டில் இலங்கை தொழில் வழி காட் டல் நிலையத்தின் மாவட்ட மனித வள இணைப்பாளர் டபிள்யு.கொலின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட் டக்களப்பு



மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஆ.நவேஸ்வரன் கலந்து கொண்டதுடன் சமூக சேவை திணைக்களத்தின் ஓய்வு பெற்ற பணிப் பாளர் ஆர்.ஜீ. வீரசிங்க வளவாளராகச் செயற் பட்டார்.

மட்டக்களப்பு மாவட் டத்தில் உள்ள விசேட தேவையு டையவர்களை வலுப்படுத்தி அவர்களுக் கான வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் அவர் களை தொழில்துறையில் ஈடு படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்து வது தொடர்பாக இச்செயலமர்வு இடம்பெற்றது.

# தென்னையில் இருந்து விழுந்தவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, பெப். 08

தென்னை மரத்திலிருந்து விழுந்து ஒருவர் உயிரிழந்துள் ளார் என சந்திவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட சந்தி வெளி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட சித்தாண்டி பகுதியில் இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற் றுள்ளது.

தனது வீட்டு முற்றத்தில் நின்ற சுமார் 50 அடி உயரமான தென்னை மரத்தில் ஏறி தேங்காய் களை பறிக்கும்போது கால் வழுக்கி நிலத்தில் விழுந்ததில் குறித்த நபர் உயிரிழந்தார் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

சித்தாண்டி -02, பிரதான வீதி யைச் சேர்ந்த 47 வயதுடைய சிவ குரு குமாரசாமி என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்திவெளி பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்துள் ளனர். (அ)

# உகந்தையில் தைப்பூசத் திருவிழா

அம்பாறை, பெப். 08

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தமலை முருகன் ஆலயத் தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருவிழா சிறப்பாக இடம்பெற்றது.

ஆலய பிரதம குரு சிவசிறி க.கு. சீதாராம் குருக்கள் தலை மையில் உதவிக்குருமார்களான சிவசிறி ஆ. கோபிநாத சர்மா மற்றும் சிவசிறி சி.கு. கோவர்த் தன சர்மா ஆகியோரின் ஒத்து ழைப்போடு இடம்பெற்ற தைப் பூசத் திருவிழாவில்காலை 10 மணியளவில் உகந்த மலையில் இருக்கின்ற வள்ளியம்மன் ஆல யத்திலிருந்து பாற்குடபவனி இடம் பெற்றது.

காலையில் பாற்கூடபவ னியை தொடர்ந்து அபிஷேகம் மற்றும் அலங்கார பூசை இடம் பெற்றது. மாலையில் திருவிளக் குப் பூசை, வசந்த மண்டப அலங்கார பூசை, சுவாமிகள் உள்வீதி உலா வருதல் என்பன இடம்பெற்றன.

பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். (அ)



# தனி தமிழ்க் கட்சியில்தான் இனி தேர்தல்களில் போட்டி

## வியாழேந்திரன் திட்டவட்டம்



அம்பாறை, பெப். 08

கிழக்கு தமிழர்களின் இருப்பை முஸ்லிம் - சிங்கள இனவாதிகளிடம் இருந்து காப்பாற்றுவதற்கு அனைத்து தமிழர்களும் ஒன்றிணைய வேண்டும் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு,மண்முனை தென் மேற்கு பட்டிப்பளை பிர தேச சபைக்குட்பட்ட பகுதியில் உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழர் மகா சபையில் போட்டி யிடும் வேட்பாளர் அறிமுகக் கூட்டம் கொக்கட்டிச் சோலை, முனைக்காட்டில் நடை பெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரி விக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தனி தமிழ்க் கட்சியில் தான் எதிர்வரும் தேர்தலில் போட்டி யிடுவேன். எமது இருப்புக்காக நாங்கள் குரல் கொடுப்போம்- என்றார். (அ)

# துருக்கி, சிரியாவில் 4,890 பேர் உயிரிழப்பு!

- 7 ஆயிரம் கட்டடங்கள் தகர்வு
- 50இற்கு மேற்பட்ட நில அதிர்வு
- நேற்று காலையும் நில நடுக்கம்



அங்காரா, பெப். 08

துருக்கியின் தென் பிராந்தியத்தையும், சிரியாவின் பெரும் பிரதேசத்தையும் நேற்று முன்தினம் அதிகாலையும் பகல் பொழுதிலும் அடுத்தடுத்து உலுக்கிய பலமான இரண்டு பூகம்ப அதிர்வுகள் காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 4ஆயிரத்து 890 ஆக உயர்ந்துள்ளது. இரு நாடுகளிலும் பலியானவர்களது எண்ணிக்கை மணிக்கு ஒரு தடவை அதிகரித்துச் செல்கிறது. சுமார் 20ஆயிரத்து 426 பேர் காயமடைந்துள்ளனர்.

இடிந்து தரைமட்டமான குடியிருப்புக் கட்டடங்களுக்குள் இன்னமும் பல நூற்றுக்கணக்கானவர்களைத் தேடும் பணிகள் நீடிக்கின்றன. அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, உக்ரைன், ரஷ்யா, இந்தியா உட்பட உலக நாடுகள் பலவற்றின் உதவிக் குழுக்கள் துருக்கி நோக்கி விரைந்துள்ளன.

அதிகாலை 04.17 மணிக்கு ரிச்டர் அளவில் 7.8 புள்ளி அளவுடைய முதலாவது நில நடுக்கம் துருக்கியின் தெற்குப் பகுதியைத் தாக்கியது. பொதுவாக அனைவரும் ஆழ்ந்து உறங்குகின்ற விடிகாலை நேரம் அது என்பதால் எழுந்து சுதாகரித்துப் பாதுகாப்பான இடங்களுக்குத் தப்பி ஓடக்கூடிய வாய்ப்புகள் எவருக்கும் இருக்கவில்லை என்றும் தங்களையும் குடும்பத்தினரையும் வெளியேற்ற முடியாமல் - அதற்கு அவகாசம் இன்றியே - நொருங்குகின்ற கட்டடங்களுக்குள் படுத்த படுக்கையாக சிக்குண்டு மடியும் பேரவலம் பலருக்கும் நேர்ந்துள்ளது என்று சொல்லப்படுகிறது.

கட்டடக் குவியல்களுக்குள் சிக்குண்டு காயங்களுடன் வெளியேற முடியாது துடித்த பெண்கள் உட்பட பலர் அங்கிருந்தவாறே உதவி கோரி அனுப்பிய குறுஞ்செய்திகள் மற்றும் வீடியோக்கள் காண்போரைக் கதறி அழச் செய்தன என்று கூறப்படுகிறது.

இரண்டாவது நில அதிர்வு நண்பகல் ஒரு மணியளவில் அதே பிரதேசத்தை உலுக்கியது. அது ரிச்டர் அளவில் 7.5 புள்ளிகளாகப் பதிவானதாக அமெரிக்காவின் நில அதிர்வு ஆய்வு நிறுவனம் அறிவித்தது. பொதுவாகப் பெரும் நில நடுக்கம் ஒன்றை அடுத்து நிகழ்கின்ற சில பின் அதிர்வுகளில் ஒன்று அல்ல அது என்றும், சில மணி நேர இடைவெளியில் நிகழ்ந்த மற்றொரு புதிய நில நடுக்கம் அது என்றும் நிபுணர்கள் கூறியிருக்கின்றனர்.

நேற்று முன் தினமும் நேற்று காலையும் அந்தப் பிராந்தியங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறிய நில நடுக்கங்கள் பதிவாகியிருக்கின்றன. நேற்று செவ்வாய்க்கிழமை காலை துருக்கியின் மையப் பகுதியை 5.6 அதிர்வு கொண்ட புதிய நில நடுக்கம் தாக்கியுள்ளதாக ஐரோப்பிய நிலநடுக்க அவதான மையம் அறிவித்திருக்கிறது.

பல மாடிகள் கொண்ட உயர்ந்த குடியிருப்புக் கட்டடங்கள் நிறைந்த நகரங்கள் குண்டு வீச்சுக்கு இலக்கான போர்ப் பிரதேசங்கள் போன்று சிதைந்து கிடப்பதை ட்ரோன்கள் மூலம் வானில் இருந்து எடுக்கப்பட்ட படங்கள் காட்டுகின்றன.

**எங்கும் இடிபாடுகள், மரண ஓலம்**

இன்றைய தினத்தை "உலகின் முடிவு நாள்" போன்று உணர்ந்தோம் என்று மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் பலர் வர்ணித்திருக்கின்றனர். அந்தப் பிரதேசங்களில் காணப்படுகின்ற கடும் குளிரும் மழையும் இருட்டும் மீட்புப் பணிகளைப் பெரும் சவாலுக்குள்ளாக்கியிருக்கின்றன.

சிரியாவின் உள்நாட்டுப் போர் காரணமாக லட்சக்கணக்கில் இடம் பெயர்ந்தவர்கள் துருக்கியின் எல்லைப் பகுதியை அண்டியே தற்காலிக வதிவிடங்களில் வாழ்கின்றனர். அந்தப் பிரதேசங்களிலும் பேரழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. கணக்கிட முடியாத சேத நிலைவரம் அங்கு காணப்படுவதாக மனிதாபிமானக் குழுக்கள் அறிவித்திருக்கின்றன.

துருக்கியை மையமாகக் கொண்ட மத்தியகிழக்குப் பிரதேசம் உலகில் அடிக்கடி நிலநடுக்கங்களைச் சந்திக்கின்ற வலயமாக உள்ளது. எனினும் நேற்றைய பலமான நிலநடுக்கங்களும் அதன் அதிர்வு விஸ்தீரணமும் தாங்கள் எதிர் பார்க்காத ஒன்று என்று சர்வதேச நில நடுக்க நிபுணர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இயற்கையின் இந்தப் பேரனர்த்தம் காரணமாக துருக்கியில் மட்டும் உயிரிழந்தவர்களது எண்ணிக்கை இதுவரை 2ஆயிரத்து 900 என்றும் 15 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் அந்நாட்டின் அனர்த்த நிர்வாக நிலையம் அறிவித்துள்ளது. சிரியாவில் பலியானவர்களது உறுதிப்படுத்தப்பட்ட எண்ணிக்கை இதுவரை ஆயிரத்து 800 ஆகும்.

துருக்கியின் அதிபர் எர்டோகன் நாட்டில் ஏழு தினங்களுக்குத் தேசிய துக்கம் அறிவித்திருக்கிறார். நாடெங்கும் பொது கட்டடங்களில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருக்கிறது. (அ)

## தொன்மையான கோட்டையும் அழிவு



டமஸ்கஸ், பெப். 08

சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் அலப்போ நகரில் உள்ள தொன்மையான கோட்டை இடிந்து விழுந்தது.

இது குறித்து அந்நாட்டு தொல்லியல் ஆய்வுத் துறையின் அறிக்கையில், அலெப்போ கோட்டையில் இருந்த ஒட்டோமான் பேரரசின் காலத்தில் கட்டப்பட்ட சிறிய கோட்டை இடிந்துபோனதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அலப்போ கோட்டையின் சுற்றுச் சுவரும் முற்றிலும் சேதமடைந்ததாகவும் தொல்லியல் துறை தெரிவித்துள்ளது. இந்தக் கோட்டை யுனெஸ்கோவின் பாரம்பரிய சின்னத்தில் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

---

துருக்கி, சிரியா நிலநடுக்கம்:

## 3 நாட்களுக்கு முன்பே கணித்து எச்சரித்த டச்சு ஆராய்ச்சியாளர்



அங்காரா, பெப். 08

துருக்கி மற்றும் சிரியாவில் நேற்று முன்தினம் திங்கள்கிழமை அதிகாலை ஏற்பட்ட பூகம்பம் அந்நாடுகளை நிலை குலையச் செய்துள்ளது.

இந்த மிகப்பெரிய நிலநடுக்கத்தை மூன்று நாட்களுக்கு முன்பு கணித்திருக்கிறார் டச்சு ஆராய்ச்சியாளர் ஒருவர்.

பிராங்க் கூகர்பீட்ஸ் என்ற அவர், துருக்கியில் நிலநடுக்கம் ஏற்படும் என்று மூன்று நாள்களுக்கு முன்பே கணித்து அதை பெப்ரவரி 3ஆம் திகதி ருவீட்டும் செய்துள்ளார்.

பெப்ரவரி 3 அன்று அவர் பகிர்ந்த ருவீட்டில், "மத்திய மற்றும் தெற்கு துருக்கி, ஜோர்டான், சிரியா, லெபனான் ஆகிய பகுதிகளைக் குறிப்பிட்டு 7.5 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது" என்று வரைபடத்துடன் கூறியிருந்தார். அவர் கணித்து கூறியது போலவே, நேற்று காலை துருக்கி - சிரியா எல்லை யில் 7.8 ரிச்டர் அளவு நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

நெதர்லாந்தை சேர்ந்த புவியியல் ஆராய்ச்சியாளர் பிராங்க் ஹூகர்பீட்ஸ், புவியியல் ஆய்வு நிறுவனம் ஒன்றில் ஆராய்ச்சியாளராக உள்ளார். துருக்கி நிலநடுக்கத்தால் தனது மனது நிம்மதியை இழந்துள்ளது எனக் கூறியுள்ள இவர், "நான் முன்பே கூறியது போல், 115 மற்றும் 526ஆம் ஆண்டுகளைப் போலவே இந்த பிராந்தியத்தில் கூடிய சீக்கிரத்தில் அல்லது தாமதமாகவோ பூகம்பம் நிகழும்.

இந்த நிலநடுக்கங்கள் எப்போதுமே முக்கியமான கிரக வடிவவியலால் ஏற்படுகின்றன. மத்திய துருக்கி மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் கூடுதலான வலுவான நில அதிர்வு நடவடிக்கைகளைக் கவனியுங்கள். ஒரு பெரிய நிலநடுக்கத்திற்குப் பிறகு, நில அதிர்வுகள் பொதுவாக சிறிது நேரம் நீடிக்கும்" என்று நிலநடுக்கத்துக்கு பிந்தைய தனது பதிவில் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

## சர்வதேச உதவியை நாடுகின்றது சிரியா

டமஸ்கஸ், பெப். 08

ஏற்கெனவே போரினால் பாதிக்கப்பட்ட சிரியா, நேற்று முன்தினம் நிகழ்ந்த நிலநடுக்கத்தால் நிலைகுலைந்துள்ளது.

தனது நாட்டுக்கு உதவுமாறு சர்வதேச சமூகத்திடம் சிரிய அரசாங்கம் கோரிக்கை விடுத் துள்ளது.

"பேரழிவு தரும் பூகம்பத்தை எதிர்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமாறு சிரியா ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளுக்கு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பிற மனிதாபிமான குழுக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறது" என்று வெளியுறவு அமைச்சு ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## உயிரிழப்பு எண்ணிக்கை 20 ஆயிரத்தை எட்டலாம்!

அங்காரா, பெப். 08

துருக்கி மற்றும் சிரியாவை தாக்கிய பேரழிவுகரமான நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20ஆயிரத்தை எட்டுமென சர்வதேச ஊடகங்கள் தலைப்பிட்டுள்ளன.

100 ஆண்டுகளுக்கும் மேலாக நேற்று முன் தினம் திங்கட்கிழமை உள்ளூர் நேரப்படி திங்கள்கிழமை காலை தாக்கிய மிக வலிமையான நிலநடுக்கம், துருக்கியின் காசியான்டெப் மாகாணத்தில் உள்ள நூர்டகிக்கு கிழக்கே 23 கிலோமீற்றர் (14.2 மைல்) தொலைவில், 24.1 கிலோமீற்றர் (14.9 மைல்) ஆழத்தில் தாக்கியதாக அமெரிக்க புவியியல் ஆய்வு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, துருக்கியின் ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோகன் ஏழு நாட்கள் தேசிய துக்கத்தை அறிவித்துள்ளார், இதன் போது நாடு முழுவதும் மற்றும் வெளிநாடுகளில் உள்ள அதன் தூதரகங்களில் துருக்கிய கொடிகள் அரை கம்பத்தில் பறக்கும்.

துருக்கியின் நிவாரண முயற்சிகளுக்கு உதவ சீனா முதல் தவணையாக 5.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அவசர உதவியாக வழங்கியுள்ளது.

சீனாவின் செஞ்சிலுவைச் சங்கம் துருக்கி மற்றும் சிரியாவுக்கு தலா 200,000 டொலர்கள் அவசர உதவி அளிக்கும்.

துருக்கி மற்றும் சிரியாவில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து தலைவர்கள் இணைந்து மொத்தம் 11.5 மில்லியன் டொலர்கள் உதவி வழங்குவதாக அறிவித்துள்ளனர். (அ)



## அபுதாபி பகிரங்க ரென்னிஸ் சானியா இணை வெளியேற்றம்

அபுதாபி, பெப். 08

அபுதாபி பகிரங்க மகளிர் ரென்னிஸ் போட்டியின் இரட்டையர் போட்டியின் முதல் சுற்றுப்போட்டியிலேயே அதிர்ச்சி தோல்வியை தழுவியது சானியா இணை.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபி நகரில் நடைபெற்றுவரும் அபுதாபி பகிரங்க ரென்னிஸ் போட்டியில் மகளிர் இரட்டையர் போட்டியில் அமெரிக்காவின் பெத்தனி மெட்டக் சாண்டஸ்டன் இணைந்து ஆடினார் இந்தியாவின் சானியா மிர்ஷா.

இந்த இணை இந்தப் போட்டியில் ஜேர்மனியின் லோரா சிஸ்முன்ட்- பெல்ஜியத்தின் கேர்ஸ்ட்ன் பிலிப்கென்ஸ் இணையை எதிர்த்தாடியது. இதில் 3 -6, 4 - 6 என்ற நேர் செற்களில் தோல்வியைத் தழுவி முதல் சுற்றுடன் வெளியேறியது சானியா மிர்ஷா இணை.

## ரஜ்நரைன் சந்தர்போல் அபார இரட்டைச் சதம்!



புலவாயோ, பெப். 08

சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியின் ரஜ்நரின் சந்தர்போல் அதிரடியாக இரட்டை சதம் விளாசியுள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணி சிம்பாவேயில் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இந்தத் தொடரின் முதல் போட்டியில் முதல் இனிங்ஸில் ரஜ்நரைன் சந்தர்போல் 467 பந்துகளில் 207 ஓட்டங்களை குவித்துள்ளார்.

கடந்த 2022 நவம்பரில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக இவர் அறிமுகமாகியிருந்தார். சிம்பாப்வே அணிக்கு எதிரான இந்தப் போட்டி அவர் விளையாடும் 3ஆவது டெஸ்ட் போட்டி என்பதுடன் 5ஆவது இனிங்ஸாகும். குறைந்த போட்டிகளில் இரட்டை சதம் எடுத்த வீரர் என்ற சாதனையையும் இவர் ஏற்படுத்தியுள்ளார்.

இதனிடையே, இவர் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் வீரர் ஷிவ்நரைன் சந்தர்போலின் மகனாவார். ஷிவ்நரைன் 136ஆவது இனிங்ஸிலேயே இரட்டை சதம் அடித்திருந்தார். அச்சமயம் அவர் 370 பந்துகளில் 203 ஓட்டங்களை குவித்திருந்தார்.

இதனிடையே, தந்தையும் மகனும் தாங்கள் இரட்டைச் சதம் அடித்த போட்டிகளில் ஆட்டமிழக்க வில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ரஜ்நரைன் சந்தர்போல் தனது தந்தையைப் போலவே முதல் டெஸ்ட் போட்டியில் அரைச்சதத்தைப் பதிவு செய்திருந்தார். இதே வழியில் தொடர்ந்து விளையாடி மேற்கிந்தியத்தீவுகள் அணிக்காக அதிக ஓட்டங்களை வரும் நாட்களில் குவிப்பார் என்ற எதிர்பார்ப்பும் அவர் மீது ஏற்பட்டுள்ளது. (ஐ)

## ஓய்வு பெற்றார் ஆஸியின் பின்ஞ்



சிட்னி, பெப். 08

அவுஸ்திரேலிய இருபது - 20 அணியின் தலைவரும் அதிரடி துடுப்பாட்ட வீரருமான அரோன் பின்ஞ் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார் என்று அறிவித்துள்ளார்.

அரோன் பின்ஞ் அவுஸ்திரேலிய அணிக்கு இருபது - 20 உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த தலைவராவார். 36 வயதான அரோன் பின்ஞ் இதுவரை 254 சர்வதேச போட்டிகளில் அவுஸ்திரேலிய அணிக்காக ஆடியுள் ளார். இதில், 146 ஒருநாள், 103 இருபது -20 மற்றும் 5 டெஸ்ட் போட்டிகள் அடங்கும். அத்துடன், 76 இருபது - 20 போட்டிகளுக்கும் 55 ஒருநாள் போட்டிகளுக்கும் அவுஸ்திரேலிய அணிக்கு தலைமை வகித்துள்ளார்.

அவுஸ்திரேலியா அணி ஒருநாள் உலகக் கிண்ணம் (2015) மற்றும் டி20 உலகக் கிண்ணம் (2021) வென்ற போது அணியில் அங்கம் வகித்தார். அண்மையில், சொந்த மண்ணில் நடைபெற்ற இருபது - 20 உலகக் கிண்ணத்தில் அவுஸ்திரேலிய அணி அரையிறுதிக்கு தகுதி பெறாமல் லீக் சுற்றுடன் வெளியேறியது. இதன் மூலம் அவர் கடும் விமர்சனத்துக்கு ஆளானார்.

கடந்த 2011ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணிக்காக சர்வதேச அரங்கில் கால்பதித்த பின்ஞ் இதுவரை 5 டெஸ்ட் போட்டிகளில் 278 ஓட்டங்களை சேர்த்துள்ளார். 146 ஒருநாள் போட்டிகளில் 5,406 ஓட்டங்களும் 103 இருபது - 20 போட்டிகளில் ஆடி 3,120 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

மேலும் 92 ஐ. பி. எல். போட்டிகளில் ஆடி 2,091 ஓட்டங்களை அடித்துள்ளார். சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் ஓர் இனிங்ஸில் அதிக (172) ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற உலக சாதனை பின்ஞ் வசமே உள்ளது. (ஐ)




## ஹர்பஜனின் சாதனையை எட்டுகிறார் அஸ்வின்!

சென்னை, பெப். 08

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்கள் வீழ்த்திய இந்திய வீரர்களின் பட்டியலில் 2ஆவது இடத்தில் உள்ள ஹர்பஜன் சிங்கின் சாதனையை ரவிச்சந்திரன் அஸ்வின் நெருங்குகிறார்.

36 வயதான அஸ்வின், இதுவரை அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 18 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 89 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். அந்த அணிக்கு எதிராக அதிக விக்கெட்கள் வீழ்த்திய இந்திய வீரர்களின் பட்டியலில் அனில் கும்ப்ளே(111 விக்கெட்கள்) முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்ததாக ஹர்பஜன் சிங் ( 95 விக்கெட்கள்) உள்ளார்.

ஹர்பஜன் சிங்கின் சாதனையை தற்போது அஸ்வின் நெருங்கவுள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி மோத உள்ளது. முதல் போட்டி நாளை தொடங்குகிறது.

இந்தத் தொடரில் அஸ்வின், ஹர்பஜன் சிங்கின் 95 விக்கெட்கள் சாதனையை முறியடித்து 100 விக்கெட்களை எட்டக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## மீண்டும் முதலிடத்தில் பார்சிலோனா அணி!




பார்சிலோனா, பெப். 08

ஐரோப்பாவில் நடைபெறும் உதைபந்தாட்ட லீக் தொடர்களில் ஒன்றான ஸ்பெயினின் லா லிகா தொடரின் போட்டியில் பார்சிலோனா 3-0 என்ற கோல் கணக்கில் செவில்லாவை தோற்கடித்தது.

அந்தப் போட்டியில் நடப்பு தொடரின் 2ஆவது பகுதி ஆட்டங்கள் தொடங்கியிருக்கும் நிலையில், லா லிகா புள்ளிகள் பட்டியலில் தற்போது பார்சிலோனா 53 புள்ளிகளுடன் முன்னிலை வகிக்கிறது.

சற்று தடுமாற்றம் கண்டுள்ள ரியல் மட்ரிட்டுக்கும் பார்சிலோனாவுக்கும் இடையே 8 புள்ளிகள் வித்தியாசம் உள்ளன. ரியல் சோசிடட் 39 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் இருக்கிறது.

இந்த சீசனில் இத்தனை புள்ளிகள் வித்தியாசத்தில் வேறெந்த அணியும் முன்னிலை வகித்ததில்லை. 2018-19 தொடருக்குப் பிறகு லீக் போட்டிகளில் கிண்ணம் எதுவும் வெல்லாத பார்சிலோனா, தற்போது அதற்கான முனைப்புடன் முன்னேறி வருகிறது. மொத்தம் 38 ஆட்டங்கள் நடைபெறும் லீக் கட்டத்தில் தற்போது 20 போட்டிகள் நிறைவடைந்துள்ளன.

செவில்லாவுக்கு எதிரான இந்த வெற்றி, லா லிகாவில் பார்சிலோனா பதிவு செய்துள்ள 5ஆவது தொடர் வெற்றியாகும். அதுவே, இதர போட்டிகளையும் கணக்கில் கொண்டால் இது அந்த அணிக்கு 10ஆவது தொடர் வெற்றி.

செவில்லாவுக்கு எதிரான இந்த ஆட்டத்தில் பார்சிலோனாவுக்காக ஜோர்டி அல்பா (58 நிமிடம்), காவி (70நிமிடம்), ரஃபினா (79நிமிடம்) ஆகியோர் கோல் அடித்தனர். (ஐ)

# 13ஆவது திருத்தம் குறித்து ஆராய சர்வமத குழு யாழ்ப்பாணத்துக்கு!

**யாழ்ப்பாணம்,பெப். 08**

**13ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதால் ஏற்படும், சாதக பாதகங்களை அறிய பௌத்த துறவிகள் அடங்கிய சர்வமத குழு யாழ்ப்பாணத் துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.**






மூன்று பௌத்த பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரர்கள் உட்பட 20 பௌத்த துறவிகள் அடங்கிய சர்வமதக் குழு யாழ்ப்பாண சர்வமதக் குழுவின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் மக்களின் நிலைப்பாடு மற்றும் வடக்கு-கிழக்கில் எவ்வகையான தாக்கத்தைச் செலுத்தும், அதனை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் சாதக, பாதக விடயங்கள் தொடர்பில் மதத் தலைவர்கள், சமூகமட்ட பிரதிநிதிகளின் கருத்துக்களை அறிவதற்காகவே இந்தக் குழுவினர் யாழ். வந்துள்ளனர்.

இந்த குழுவினர், யாழ்ப்பாணத்தில் உள்ள மதத் தலைவர்கள், சமூக மட்ட பிரதிநிதிகள், வட மாகாண ஆளுநர் மற்றும் வடக்கில் செயற்படும் அரச அதிகாரிகளுடன் சந்திப்பில் ஈடுபடவுள்ளதாக யாழ்ப்பாண சர்வமதக் குழுவின் இணைப்பாளர் அருட்தந்தை டிக்சன் தெரிவித்தார். (அ)

# ராஜிதவுக்கு எதிரான வழக்கு ஆவணத்தைக் காணவில்லை

*கொழும்பு, பெப். 08*

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவிருந்த ஆவணங்களில் ஒரு ஆவணம் காணாமல் போயுள்ளது.

இலஞ்ச, ஊழல் ஆணைக் குழு சமர்ப்பித்த திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நேற்று முன் தினம் அழைக்கப்பட்டபோதே இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன.

மோதரை மீன்பிடித் துறைமுகத்தை தனியார் நிறுவனத்துக்கு குறைந்த விலைக்கு குத்தகைக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படுத்தினார் என முன்னாள் அமைச்சர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த வழக்கின் முறைப்பாட்டில் ஆதார ஆவணமாக குறிப்பிடப்பட்ட கடற்றொழில் துறைமுக சட்டபூர்வ கூட்டுத்தாபனத்தின் 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதியிடப்பட்ட பணிப்பாளர் சபையின் பத்திரமே காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை - மாலைதீவு இடையே ஒப்பந்தம்

*கொழும்பு, பெப். 08*

இலங்கை மற்றும் மாலைதீவுக்கு இடையிலான கலாசார ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்காக தயாரிக்கப்பட்ட ஒப்பந்த வரைவுக்கு சட்டமா அதிபரின் அனுமதியும் வெளிவிவகார அமைச்சின் இணக்கமும் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு

*கொழும்பு, பெப். 08*

கடும் மழை காரணமாக பயிர்ச்செய்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்குமானால் உடனடியாக அதுதொடர்பில் கமத்தொழில் சேவை மத்திய நிலையத்திற்கு அறிவிக்குமாறு விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை விவசாய சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மழை காரணமாக சில மாவட்டங்களில் பயிர்ச்செய்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் கிடைத்து வருவதாகவும் அது தொடர்பில் கவனம் செலுத்தி பாதிப்புகளுக்கான நட்டஈடு தொடர்பில் அறிக்கைகளைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கிணங்கவே அந்த காப்புறுதிச் சபை விவசாயிகளுக்கு மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளது.

பயிர்ச்செய்கைகள் பாதிப்புக்கான நட்டஈடாக ஒரு ஹெக்ரேயருக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் நட்டஈடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி காப்புறுதிச் சபையானது அரசாங்கத்தின் நடுநிலை கண்காணிப்பின் கீழ் நட்டஈட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. (அ)

# அதிக பணியாளர்களைக் கொண்ட 55 திட்ட அலுவலகங்கள் மூடப்படும்

*கொழும்பு, பெப். 08*

அதிக எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கொண்ட 55 திட்ட அலுவலகங்களை மூட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திட்ட அலுவலகங்கள் மற்றும் திட்ட முகாமைத்துவ அலகுகளை மீளாய்வு செய்வதற்கான குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அமைச்சரவை இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 32 திட்ட அலுவலகங்களை தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

46 திட்ட அலுவலகங்கள் குறைந்தபட்ச ஊழியர்களின்



கீழ் இயங்கவேண்டும் என்றும், இது தொடர்பான குழு அறிக்கை பரிந்துரைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவையில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் அமைச்சர்களின் கோரிக்கைக்கு அமைய 55 அலுவலகங்களும் மூடப்படுமா என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் இதற்கு ஜனாதிபதி தனது இணக்கத்தை தெரிவித்துள்ளார் எனவும் அமைச்சர் கூறினார்.

குறித்த அலுவலகங்களில் ஆலோசகர்கள் உட்பட பெருமளவு ஊழியர்கள் உயர் சம்பள மட்டங்களுக்கு அமைய உள்வாங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

நாடு எதிர்நோக்கும் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் பெரிய திட்ட அலுவலகங்களை பராமரிக்க முடியாத நிலையில், குழுவொன்றை நியமித்து அந்த திட்ட அலுவலகங்களை மதிப்பீடு செய்ய ஜனாதிபதி அண்மையில் தீர்மானித்திருந்தார்.

முன்னாள் அமைச்சின் செயலாளர் எச்.டி. கமல் பத்மசிறி தலைமையில் ஜனாதிபதியினால் இது தொடர்பான குழு நியமிக்கப்பட்டது. (அ)

# துருக்கிக்கு உதவி வழங்க இலங்கை தயாராகவுள்ளது

## *அமைச்சர் அலி சப்ரி அறிவிப்பு*

*கொழும்பு, பெப். 08*

துருக்கி அரசாங்கத்தின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டால் உதவிகளை வழங்க இலங்கை தயாராக இருக்கின்றது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அதற்காக இராணுவத்தினர், மருத்துவர்கள் மற்றும் பொறியியலாளர்கள் உட்பட 300 பேர் கொண்ட இராணுவக் குழுவொன்றை களமிறக்க இலங்கை தயாராக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, துருக்கியில் உள்ள 13 இலங்கையர்களுடன் தொடர்ந்தும் தொடர்பில் உள்ளதாக இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.



இதுவரை 14 இலங்கையர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளதாக துருக்கிக்கான இலங்கை தூதுவர் அசாந்தி திசாநாயக்க குறிப்பிட்டார்.

மற்றுமொரு நபரான பெண்ணுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகவும் அவர் கூறினார். (அ)

# தேர்தலை நடத்துவதா இல்லையா? உயர்நீதிமன்றம் தீர்மானிக்கட்டும்!

## *கூறுகின்றார் மைத்திரிபால சிறிசேன*

*கொழும்பு, பெப். 08*

தேர்தலை நடத்துவதா இல்லையா என்பதை உயர் நீதிமன்றமே தீர்மானிக்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலனறுவையில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



தேர்தல் ஒத்திவைக்கப்படுமா இல்லையா என்பதை என்னால் கூற முடியாது. அது குறித்து தேர்தல் ஆணைக்குழுவும், அரசாங்கமும் தான் முடிவு செய்யவேண்டும்.

இது குறித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் 09ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதன்போதே திட்டமிட்ட திகதியில் தேர்தல் நடைபெறுமா இல்லையா என்பது தெரியவரும் - என்றார். (அ)

## மருத்துவர்கள்...

அறிவித்துள்ளது.

புதிய வரி விதிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு முழுவதும் இன்று புதன் கிழமை காலை 8 மணி தொடக்கம் நாளை வியாழக்கிழமை காலை 8 மணி வரை நடைபெறும் இந்தப் புறக்கணிப்பு போராட்டத்தின்போது அரச மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் சேவையில் ஈடுபட மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துடன் 40 வரையான தொழில்சங்கங்கள் இணைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழரின்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“இனப்பிரச்னைக்கு தீர்வாகவே அரசமைப் பின் 13 ஆவது திருத்தம் ஊடாக மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் அரசியல் உரிமை மாகாண சபை தேர்தல் ஊடாக பாதுகாக்கப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் அந்த உரிமையையும் பறித்துக் கொண்டது.

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக் கூற வேண்டும். நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததன் பின்னணியில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தவிர்த்து ஏனைய அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கக் கூடாது என மகாசங்கத்தினர் உட்பட பெரும்பாலான தரப்பினர் கடுமையாக வலியுறுத்துகிறார்கள்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்க பகிர்ந்தளிக்கும்போது நாட்டில் தேவையில்லாத பிரச்னைகள் தோற்றம் பெறும். அதிகாரங்கள் பகிரப்படாத நிலையிலும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் அரசியல் பரிந்துரைகளின் பிரகாரம் நியமிக்கப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு காணப்படுகிறது.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அல்ல எந்த மாகாணங்களுக்கும் பகிர்ந்தளிக்கக்கூடாது. அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகக் கூறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையில்லாத பிரச்னைகளை தோற்றுவித்துள்ளார்.

அதிகார பகிர்வு விவகாரத்தில் தெற்கு அரசியல்வாதிகள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு முன்னர் தமிழ் தலைமைகள் நடைமுறைக்கு சாத்தியமான ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். அதிகார பகிர்வு விவகாரத்தில் தமிழ் தலைமைகள் மத்தியில் காணப்படும் கருத்து மற்றும் கொள்கை வேறுபாடுகள் அதிகார பகிர்வு விவகாரம் காலம் காலமாக இழுபறி நிலையில் இருக்க ஏதுவான காரணியாக உள்ளது.

அதிகாரத்தை பகிர்ந்தளிக்க நான் தயாராக இருந்தேன். அதிகார பகிர்வு விவகாரத்தில் தமிழ் தலைமைகள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் அறிவிப்பார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டுமாயின் சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும். 13ஆவது திருத்தம் தொடர்பில் அரசியல் தரப்பு எடுக்கும் தீர்மானம் சிறந்ததாக அமையாது. முரண்பாடுகளை மாத்திரம் தோற்றுவிக்கும் - என்றார். (ஐ)

## 13 குறித்து...

தெரிவித்திருக்கிறார் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய.

கண்டிக்கு சென்று மதவழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, தற்போதைய அரசாங்கத்தின் வரிக் கொள்கைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி நியாயமான முறையில் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படவேண்டும்.

இப்போது தேர்தல் நடைபெற வேண்டும். ஆனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலால் நாட்டில் ஆட்சி மாற்றம் நடைபெறப்போவதில்லை. எவ்வாறாயினும் ஒரு தரப்பினர் தேர்தலுக்கு நிதியில்லை எனக் கூற மற்றொரு தரப்பினர் தேர்தலை நிச்சயமாக நடத்தியே ஆக வேண்டும் என்று கூறுகின்றனர். எனினும், பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி அல்லது பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என கூறுகிறார்கள். இது தொடர்பில் பாராளுமன்றத்தில் கலந்துரையாடி தீர்மானத்துக்கு வர வேண்டும் - என்றும் அவர் சொன்னார். (ஐ)

## எம்மை...

தீர்மானம், திம்புக் கோட்பாடு, பொங்கு தமிழ் பிரகடனம் ஆகியவற்றின் நீட்சியாக அமைந்த மட்டக்களப்பு பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

அரசியல் தீர்வுக்கான பேச்சு அரசமைப்பு ஏற்பாடுகளை செய்வதற்கு முன், பின்வரும் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில் இருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

இந்த உடன்படிக்கையானது, ஏனைய விடயங்களுக்கும் மேலாக, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, அதன் இறைமை மற்றும் தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் வரலாற்றுத் தாயகம் அங்கீகரிக்கப்படுவதோடு, முதலில் தமிழர் தாயகத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும், இந்த உடன்படிக்கையானது தமிழ் மக்களின் உடனடிப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும், இந்த உடன் படிக்கை ஒருதலைப்பட்சமாக ரத்து செய்யப்பட்டால், சர்வதேச மற்றும் ஐக்கிய நாடுகள் அவையின் ஒழுங்கு படுத்தல், கண்காணிப்பு என்பவற்றோடு, தமிழ் மக்கள் ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் தமது அரசியல் எதிர்காலத்தை தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற ஏற்பாடு இவ் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும், இந்த உடன்படிகை மூன்றாம் தரப்பான சர்வதேச தரப்பினரின் முன்னிலையில் எழுதப்பட வேண்டும்.

இறுதித் தீர்வை எட்டுவது என்பது, வன்முறைச் சுழற்சிகள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கும், இலங்கையில் நிலையான அமைதியை அடைவதற்கும், இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் நிலையான அமைதியை நிலைநாட்டுவதற்கும் முக்கியமாக உள்ளதென்பதை இப்பிராந்தியத்தை அக்கறையோடு கையாளும் நாடுகள் உணர்ந்து செயல்படவேண்டும்.

ஈழத் தமிழரின் தேசிய இனப் பிரச்னையில் மரபுவழித் தாயகம், தமிழ் தேசியம், தன்னாட்சியுரிமை என்ற அடிப்படையில் எட்டப்படும் எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வும், சர்வதேசத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம், தமிழ் மக்களின் ஆணை பெறப்படவேண்டும் என்பதே எமது உறுதியானதும் அறுதியானதுமான நிலைப்பாடாகும்.

அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து, எம்மை நாமே ஆளக் கூடிய நிரந்தரத் தீர்வும் பொதுவாக்கெடுப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். (ஐ)

# தமிழர்களுக்கு என்று தனியான தாயகம் இந்த நாட்டில் இல்லை!

## விமல் வீரவன்ஸ, சரத் வீரசேகர கூறுகின்றனர்

கொழும்பு, பெப். 08

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகம் என்று எந்த அரசமைப்பில் இருக்கின்றது? தமிழர்களுக்கென ஒரு தாயகம் இந்த நாட்டில் இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸவும் சரத் வீரசேகரவும் தெரிவித்துள்ளனர்.

தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறைக்கு எதிராக யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு சென்ற பேரணி தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

இது தொடர்பில் விமல் வீரவன்ஸ கூறுகையில்,

“தமிழர்களுக்கு தாயகம் வேண்டும் என்று போராடிய விடுதலைப் புலிகள் போரில் ஒழிக்கப்பட்ட பின்னர் என்ன நோக்கத்தோடு வடக்கிலும் கிழக்கிலும் போராட்டம் நடத்தப்படுகின்றது? இந்தப் போராட்டத்தின் பின்னால் உள்ள சர்வதேச நாடுகள் எவை?

தனிநாட்டைக் கோரிய விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்த படையினரை அவமதிக்கும் வகையிலும் கோஷங்களை எழுப்பியவாறு வடக்கில் இருந்து கிழக்கு நோக்கிப் புறப்படும் தமிழர் பேரணிக்கு அனுமதி வழங்கியது யார்? - நாடு இருக்கும் தற்போதைய நிலைமையில் இப்படியான பேரணி ஒன்று தேவையா? இந்த விடயத்தில் பாதுகாப்பு அமைச்சு மௌனம் காத்தது ஏன்?

வடக்கு- கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகம் என்று எந்த அரசமைப்பில் இருக்கின்றது? தமிழர்களுக்கென ஒரு தாயகம் இந்த நாட்டில் இல்லை. இது ஒற்றையாட்சி கட்டமைப்பைக்கொண்ட நாடு. எனவே, இந்த நாட்டை எந்தத் சந்தர்ப்பத்திலும் பிளவு படுத்த முடியாது சமஷ்டி வேண்டும் என்று ஊளையிடுபவர்களைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்“ என்றார்.

இது தொடர்பில் விமல் வீரவன்ஸ தெரிவிக்கையில்,

“இந்தப் பேரணிக்கு புலம்பெயர் நாடுகளில் இருந்து நிதியுதவிகளை வழங்குபவர்கள் யார்? அன்றாட கருமங்களில் இருக்கும் மக்களை வலுக்கட்டாயமாக வீதிக்கு அழைத்து வந்தவர்கள் யார் ? என்பது தொடர்பில் அரச புலனாய்வுத் துறையினர் உடனடி யாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இப்படியான போராட்டங்களும் பேரணிகளும் நாட்டை வன்முறை களமாக்கி மீண்டும் இருண்ட யுகத்துக்கே கொண்டு செல்லும். இந்த விடயம் தொடர்பில் அரசாங்கமும் அதிகாரத்தில் இருப்பவர்களும் அதிக கவனம் எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## பாராளுமன்றில்...

அத்துடன், அவர் கொள்கை பிரகடன உரையையும் ஆற்றுவார்.

ஜனாதிபதியின் கொள்கை உரையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு, இலங்கை தமிழரசு கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், முற்போக்கு கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், என்பன பங்கேற்கவுள்ளன.

இதேசமயம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை என்பன புறக்கணிக்கவுள்ளன என்று அறிவித்துள்ளன. (ஐ)

## 13இற்கு...

இந்த சந்திப்பின் பின்னர் சர்வமதத் தலைவர்கள் அனைவரும் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினர். இதன்போதே, மேற்படி விடயத்தை அவர்கள் தெரிவித்தனர்.

13ஆம் திருத்தத்தை நிறைவேற்றக் கூடாது என்று மகாநாயக்கர் தேரர்கள் நால்வர் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ள நிலையில் இவர்களின் கருத்து முக்கியத்துவம் பெற்றுள்ளது. (ஐ-03)

## வீதியில்...

கடை சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றது. இதில், க. றேகன் (வயது 35) என்பவரே உயிரிழந்தார்.

வீதியில் நெல் உலரவிடப்படுவதாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

விபத்து தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் அளித்தும் நீண்டநேரமாக பொலிஸார் அப்பகுதிக்கு வரவில்லை என்று கூறப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் நடத்தி வருகின்றனர். (ஐ)

## மக்களின்...

முறைகள் - ஆக்கிரமிப்புகளை கண்டித்து நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை கரிநாளாகப் பிரடனப்படுத்தி யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு பேரணிக்கு அழைப்பு விடுத்தனர்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான பேரணி முதல்நாளில் இரணைமடுவில் நிறைவடைந்து. இரண்டாம்நாள் பரந்தனில் ஆரம்பமான பேரணி முல்லைத் தீவில் நிறைவடைந்தது. மூன்றாம் நாளில் முல்லைத்தீவு பண்டாரவன்னியன் சிலையருகே ஆரம்பமான பேரணி வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தில் நிறைவடைந்தது.

நான்காம் மற்றும் இறுதிநாளான நேற்று வெருகலில் இருந்து ஆரம்பமான பேரணி வாகரை நோக்கிப் பயணித்தது. வாகரையை அடைந்த பேரணிக்கு கதிர வெளியில் மக்கள் பலத்த வரவேற்பு அளித்தனர். பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இவ்விடத்தில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியமும் பேரணியில் கலந்துகொண்டது.

தொடர்ந்து, வாகரை - கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி உறுதிமொழி எடுக்கப்பட்டு, மட்டக்களப்பு நோக்கி நகர்ந்தது.

மட்டக்களப்பு நகரை எழுச்சிப் பேரணி அடைந்ததும் நகர் ஊடாக காந்தி பூங்கா அருகே படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, எழுச்சிப் பேரணி மட்டக்களப்பு வெபர் மைதானத்தை அடைந்து பெரும் எழுச்சியாக நிறைவுக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது, எழுச்சிப் பிரகடனம் வாசிக்கப்பட்டது. அந்தசமயம் ஒருவர் தேசியக் கொடியை எரியூட்ட முயன்ற நிலையில் அங்கு குழப்பம் ஏற்பட்டது. எனினும், போராட்டத்தை ஏற்பாடு செய்த மாணவர்கள் அவரின் செயலை தடுத்து நிறுத்தினர்.

இந்தப் பேரணியில், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் இயக்கத்தின் இணைப்பாளர்களான வேலன் சுவாமி, அருட்தந்தை ஜெகதாஸ் அடிகளார் மற்றும் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றிய குருமார்கள், வடக்கு, மக்றும் கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல் பிரமுகர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சிவாஜியின் வாகனம் விபத்தில் சிக்கியது!



மட்டக்களப்பு, பெப். 08

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த பேரணியில் பங்குகொண்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் வாகனம் ஓட்டோ ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த சம்பவம் கிழக்கின் சேருவில பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பேரணிக்குள் சடுதியாக நுழைந்த ஓட்டோவுடனேயே அது மோதி விபத்தில் சிக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

வாகனத்தில் எம்.கே.சிவாஜிலிங்கமும், அவருடைய சாரதியும் இருந்தனர் எனக் கூறப்பட்டது.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த ஓட்டோச் சாரதி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

விபத்தில் சிக்கிய ஓட்டோவும் சிவாஜிலிங்கத்தின் வாகனமும் சேருவில பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. (அ)

# சுதந்திர தின கொண்டாட்டம்: 11,130,011 ரூபா மொத்த செலவு

கொழும்பு, பெப். 08

இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தினத்தின் உத்தியோகபூர்வ அரச விழாவுக்காக அரசாங்கம் செலவிட்ட மொத்தத் தொகை 11,130,011 ரூபா 29 சதம் என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் அரச கொண்டாட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகையை விட இந்த ஆண்டு சுதந்திர தின விழாவுக்கு மிகக் குறைவான தொகையே அரசாங்கம் செலவிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

சுதந்திர வைபவத்துக்காக அரசாங்கம் 5.8 மில்லியன் ரூபாவை செலவிட்டதாக வெளியான செய்தி முற்றிலும் பொய்யானது எனவும், கல்வி அமைச்சு சுதந்திர வைபவத்துக்கான ஆரம்ப செலவை மதிப்பிட்டுள்ளதாகவும், ஆனால் அந்த பணம் எதுவும் செலவிடப்படவில்லை எனவும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# இரட்டை குடியுரிமையை துறப்பதற்கு நான் தயார்!

## கூறுகிறார் பஸில் ராஜபக்ஷ



கொழும்பு, பெப். 08

**இரட்டைக் குடியுரிமையை துறப்பதற்கு தயாராகவே இருக்கின்றேன் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

சிங்கள தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே பஸில் ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

" எமக்கு 69 லட்சம் பேர் வாக்களித்தனர். அவர்களை கைவிடுவதற்கு நாம் தயாரில்லை. மொட்டு கட்சி அழிந்துவிடும் என சிலர் நினைத்தனர். ஆனால் மீண்டு வந்துள்ளோம். உள்சூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடு கின்றோம். எனக்கு அரசியல் செய்வதற்கு இரட்டைக் குடியுரிமை தடையெனில் அதனை துறப்பதற்கு தயார்." - எனவும் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். (அ)

# 18 இலங்கையர்களுடன் மீன்பிடிப்படகு மொறீஸியஸ் தீவில் கரை ஒதுங்கியது!

கொழும்பு, பெப். 08

இலங்கையர்களின் ஆபத்தான கடற்பயணங்கள் தொடர்கின்றன. மூன்று குழந்தைகளுடன் 18 பேர் பய ணம் செய்த இலங்கைப் படகு ஒன்று கடந்த வெள்ளியன்று மொறீஸியஸ் கடற்பரப்பினுள் பிரவேசித்து உதவி கோரியுள்ளது.

மொறீஸியஸ் தீவின் கரையோரக் காவல்படையினர் படகை வழிமறித்தபோது அந்தப் படகின் கப்டன் அவசரமாக ஆயிரம் லீற்றர் எரிபொருள் உதவி கோரினார் என்ற தகவலை அந்நாட்டு செய்தி ஊடகம் ஒன்று வெளியிட்டிருக்கிறது.

அந்தப்படகு இலங்கையில் இருந்து கடந்த டிசெம்பர் 4 ஆம் திகதி புறப்பட்டது. ஆபிரிக்க நாடு ஒன்றை நோக்கிச் செல்லும் வழியில் இடையில் ஜனவரி 15 இல் அது இந்து சமுத்திரத்தின் மற்றொரு தீவாகிய டியாகோ கார்சியாவில் தரித்தது என்ற தகவலைப் படகில் இருந்தோர் தெரிவித்திருக்கின்றனர்.

படகு மொறீஸியஸ் கடற்பரப்பினுள் அவதானிக்கப் பட்டபோது அது ரியூனியன் தீவை நோக்கியே வருகிறது என்று எதிர்பார்க்கப் பட்டது.

படகில் இருப்பவர்களை மீட்பதற்கான ஏற்பாடு களை ரியூனியன் தீவின் அதிகாரிகள் திட்டமிட்டு விட்டுக் காத்திருந்தனர். அது ரியூனியன் கடற்பரப்பினுள் பிரவேசிக்கலாம் என்று பொலீஸ் தலைமையகம் மீட்புப் பணியாளர்களுக்குத் தெரிவித்திருந்தது.

ஆனால் படகு தற்சமயம் மொறீஸியஸ் தீவின் துறைமுகத்தில் தரித்துள்ளது எனத் தகவல் வெளியாகியிருக்கிறது.

அது எரிபொருள் நிரப்பிய பிறகு அங்கிருந்து எத்திசை நோக்கிச் செல்லப் போகிறது என்பதைக் கரையோரக் காவலர்கள் தொடர்ந்து கண்காணிக்க வுள்ளனர்.

பிரான்ஸின் நிர்வாகத்தின் கீழ் - இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள - ரியூனியன் தீவை நோக்கி இலங்கையர் கள் படகில் வருவது சமீப நாட்களாக அதிகரித்திருப்பது தெரிந்ததே. (அ)

# சார்ள்ஸின் பதவி விலகலை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி

கொழும்பு, பெப். 08

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால், இந்த தீர்மானம் பி.எஸ்.எம். சார்ள்ஸுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தேர்தல் ஆணைக்குழுவின் பதவி ஒருவர் விலகுவதால் எதிர்வரும் தேர்தல் நடவடிக்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என ஏலவே, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திறைசேரி பணம் தராவிட்டால் உயர்நீதிமன்றத்தை நாடுவோம்!

## தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை



கொழும்பு, பெப். 08

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு தேவையான அடிப்படைச் செலவுகளுக்கு பணம் வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்த கோரிக்கைக்கு திறைசேரி செயலாளர் உரிய பதில் அளிக்காவிட்டால், உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சிஹேவ தெரிவித்தார்.

அரசாங்க அச்சக திணைக்களம், பொலிஸ் திணைக்களம், தபால் திணைக்களம் போன்றவற்றுக்கு முற்பணத்தை வழங்குமாறு கோரியுள்ளதாகவும், அந்த கோரிக்கைகளுக்கு அமைய அடிப்படைச் செலவினங்களுக்காக திறைசேரி செயலாளரிடம் 770 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளதாகவும் தலைவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும், தேர்தலை இடைநிறுத்தக் கோரியும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வர உள்ளதாக தெரிவித்த ஆணைக்குழுத் தலைவர், உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை ஏற்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

தேர்தலுக்கு தேவையான முன்பணம் பெறாவிட்டால், அறிவிக்கப்பட்ட திகதியில் வாக்குப்பதிவை நடத்த முடியாது என்றும் வலியுறுத்தினார்.

அரசாங்கத்தின் அச்சகத் திணைக்களமும் 100 மில்லியன் ரூபாவை முற்பணமாக வழங்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன் தற்போது 40 மில்லியன் ரூபா பெறுமதியான அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் மேலும் 60 மில்லியன் ரூபா பெறுமதியான அச்சடிக்கும் பணியை அவசரமாக மேற்கொள்ளவேண்டுமென திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதில் இலங்கை அசமந்தம்!

## ஐரோப்பிய ஒன்றியம் கடும் அதிருப்தி

கொழும்பு, பெப். 08

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்வது தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அரசியல் அச்சுறுத்தல்களுக்கு இந்த சட்டம் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ளது.

இதனையடுத்து, இந்த விடயம் எதிர்வரும் மார்ச்சில் வெளியாகவுள்ள இலங்கைக்கான ஜி.எஸ்.பி மீதான அறிக்கையில் எதிர்பார்க்கப்படுவதாக ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், இலங்கையில் இன்னும் சிக்கல் நிறைந்ததாக அமைந்துள்ளது.

எனினும் அவற்றை தீர்ப்பதற்கு இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சாய்பி நேர்காணல் ஒன்றின்போது தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் நீதித்துறை மீளாய்வு மேற்கொள்ளப்படவில்லை. எனவே பல அரசியல்வாதிகள் தங்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டதாக தம்மிடம் முறையிட்டுள்ளதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்துடன் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதில் இலங்கை மக்கள் மத்தியில் பரந்த கருத்தொருமைப்பாடு உள்ளது. 2017 ஆம் ஆண்டில் பயங்கரவாத தடை சட்டத்தை சர்வதேச தரத்திற்கு ஏற்ப அமைக்க அரசாங்கம் உறுதி யளித்தது.

அத்துடன் கடந்த அரசாங்கம், பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவதற்கு நடைமுறையில் தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும், பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தியதாக ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் தமது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக புதிய தேசிய பாதுகாப்பு சட்டம், சர்வதேச எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அமைவதையே தாம் எதிர்பார்ப்பதாக தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.